
# பாரதமணி

ஆசிரியர்
கே.எஸ். வெங்கடரமணி

சித்திரபானு ௵
மாசி மீ

விலை அணா 4

FEBRUARY
1943



THE BHARATA MANI MAYAVARAM

# அவளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்— அழுக்கி லிருந்து!





அழுக்கிலுள்ள அபாயத்திலிருந்து காக்கக் கூடிய **லைப்பாய்** முறையை அவளுக்குப் போதியுங்கள்

அழுக்கைப் பற்றி ஏதோ சற்று சிரத்தைக் குறைவினுல் அவளுக்குத் தீங்கு நேர வேண்டுமென்ருல் என்ன பரிதாபம்! அவளை அழுக்கிலிருந்து உங்களால் நிச்சயமாக விலக்க முடியாது—ஆனுல் அதனுடைய அபாயங்களிலிருந்து லைப்பாய் மூலம் அவளைப் பாதுகாக்க முடியும்.

பாருங்கோ, அழுக்கிலிருந்து கிருமிகள் உண்டாகின்றன. அநேக வியாதிகளுக்குக் காரணம் அழுக்கிலுள்ள கிருமிகள்தான். ஆனுல் கிருமி நாசன லைப்பாய் ஸோப் ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய தனது அதிசயமான நுரையினுல். இந்த அபாயத்திலிருந்து தப்பச் செய்கிறது [illegible] நீங்கள் அவளை அழுக்கிலிருந்து [illegible] போதும், [illegible] பத்திரமாகக் காத்துக்கொள்ள [illegible] அவளுக்கு இந்த லைப்பாய் ஆரோ[illegible] கற்றுக் கொடுங்கள் — சாப்பாட்டி[illegible]யும், விளையாட்டிற்குப் பிறகும் தின[illegible] முறை தவருமல் லைப்பாயினுல் சுத்திசெய்ய வேண்டும். பிறகு நீங்கள் தொல்லைப் படவேண்டிய அவஸ்யமில்லை.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது

**லைப்பாய்** அது ஒரு நல்ல வழக்கம்




L. 35-82 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED




ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

| மாலை 9 | FEBRUARY 1943 :: சித்திரபானுவு மாசிமீ | முத்து 2 |
|---|---|---|

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் .... | கா. சி. வேங்கடரமணி | 34 |
| 2 | ஸ்ரீ ஸாயி நாதரின் பெருமை .... | பி. எஸ. வரதராஜ ஐயர் | 36 |
| 3 | இன்று செய்ய வேண்டியது யாது? .... | வித்துவான் பி. சேதுராவ் | 38 |
| 4 | தியாகராஜ வைபவம் .... | கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 41 |
| 5 | தான்யலக்ஷ்மி .... | சுத்தானந்த பாரதியார் | 45 |
| 6 | அதிகார வர்க்கக் கோட்டையையே முற்றுகை .... | ரா. சந்திரசூடன் | 52 |
| 7 | ரர்க்வினின் விவாஹம் .... | ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன் | 55 |
| 8 | சிறுவர் பகுதி:— .... | | |
| | பேராசை பெருநஷ்டம் .... | கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 60 |
| | தாக்ஷாயணி .... | எல். ஆர். விஸ்வநாத சர்மா | 61 |

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனல்ல.

# ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

(கா. சி. வேங்கடரமணி).

"மேழிச் செல்வம் கோழைப்படாது" என்ற பழமொழி என் இளம் பிராயம் முதல் என் ரத்தத்தில் கலந்து ஊறி நிற்கிறதென்று நினைக்கிறேன். இந்த மனோபாவத்திலிருந்த பொழுதுதான் 'முருகன் ஓர் உழவன்' பிறந்திருக்க வேண்டும். 1926-ம் வருஷத்தில் நான் இதை நவீனமாக வெளியிட்டிருந்தாலும் இது என் மனதில் 'கஜகர்ப்பம்' போல் பன்னிரெண்டு வருஷகாலம் குடிகொண்டு வற்புறுத்திக்கொண்டேயிருந்தது.

எந்தப் பிரச்னையை எடுத்தாலும் கிராமத்தின் முன்னேற்றத்திலும் சீர்திருத்தத் திட்டத்திலும் அதைக் கொண்டுவந்து முடிப்பேன். அப்பொழுது அரசியலிலும், வக்கீல் தொழிலிலும் தலைவர்களாகப் பட்டம் தரித்து வந்தவர்கள் என்னை 'கிராமப்பித்து' என்று சொல்வது வழக்கம். ஆனல் ஒருவர்மாத்திரம் இந்த விஷயத்தில் எனக்கு மனமார்ந்த வரவேற்பு அளிப்பது உண்டு. அவரிடம் நான் நெருங்கிப் பழகியதுமில்லை. அவர்தான் இப்பொழுது பரோடாவில் திவானுயிருக்கும் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார். வெகுகாலமாய் இவர் கிராமத்தில் கொண்ட ஆசையையும் அன்பையும் நாம் ஒருநாளும் மறக்கமுடியாது.

## 2

தவிர, இளம் பிராயத்திலேயே இவரிடம் மற்றொரு தொடர்பும் அன்பும் எனக்கு ஏற்பட்டிருந்தது. மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலில் 1906-வது வருஷத்தில் ஐந்தாவது பாரத்தில் நான் வாசித்துக்கொண்டிருக்கும்போது இவர் மாயவரத்தில் டிப்டி கலெக்டராக இருந்தார். அவருக்கு இளம் பிராயம். புரொவின்ஷியல் சிவில் சர்வீஸ் பரீக்ஷையில் முதலில் பாஸ் பண்ணி நேரில் டிப்டி கலெக்டராக வந்தவர். ஊக்கமான தொண்டு. உயிர் மூட்டும் பரபரப்பு; செயலிலே கண். சொல் குறைவு. நல்ல கியாதி. சாந்தமான தோற்றம். அழகுடன் கலையும் கலந்த தேஜஸ்—வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

வட இந்தியாவில் கயாவும் தென் இந்தியாவில் மாயவரமும் 'அசுத்த நகரப் போட்டி' ஏற்படுத்தினல் அதில் முதல் பரிசு பெறும் என்பதில் சந்தேகமில்லை. நான் மாயவரத்தில் ஹைஸ்கூலில் வாசித்துக்கொண்டிருக்கும்பொழுது வள்ளலார்கோவில் ஒற்றைத்தெருச் சாக்கடை மிகப்பிரசித்தி. இதை வர்ணிக்க வேண்டுமென்ற ஆசையை என் இளம் கவிதை தூண்டிவிட்டது. அந்தக்காலத்தில் பிரபல ஆங்கில ஆசிரியர்களான பர்க்கையும், டக்குன்சியையும் (Burke and De Quincy) உற்சாகத்துடன்வாசித்துக் கொண்டுவந்தேன். மாயவரம் முனிசிபாலிடியைப் பற்றி, அப்பொழுது கருணகர மேனன் நடத்திவந்த 'இண்டியன் பேட்ரியட்' என்கிற தினசரிப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதி அனுப்பினேன். அது உடனே அச்சாகி வெளிவந்து எனக்கு அளவில்லாத சந்தோஷத்தை யளித்தது. அதுதான் அச்சில் வெளிவந்த என் முதல்கட்டுரை. இதை நினைத்து நினைத்துக் காவேரியில் அப்பொழுது இன்னும் உல்லாசமாய் துளைவேன். இந்த ஆனந்தத்தைப் பதின் மடங்காகப் பெருக்கி விட்டார் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார். 'இண்டியன் பேட்ரியட்டி'ல் இந்தக் கட்டுரையை அவர் வாசித்துப் பார்த்து நீலப் பென்சிலால்—டிப்டி கலெக்டர்களுக்கு டேப்பும், நீலப் பென்சிலும் பஞ்சமா?—மார்க்செய்து முனிசிபல் சேர்மெனுக்கு அதை அனுப்பிவிட்டார். சேர்மென் பி.ஏ. படித்தவர்—மாத்தூர் நடேசய்யர். ரசிகர். கோபக்காரர். அவர் அதைப் படித்துப்பார்த்து அடங்காக் கோபங்

கொண்டு தனது அழகிய 'டாக் கார்ட்டி'ல் ஏறிக் குதிரையை சவுக்கால் அடித்து மாயவரம் முழுதும் துளாவி அந்தக் கட்டுரை எழுதினவரைக் கண்டு பிடிக்க 3-நாள் பிரயாசைப்பட்டார்.

கேழ்க்கவேண்டுமா! என் பெயர் பிரசித்தமாய்ப் போய்விட்டது. பரீக்ஷையில் பாடுபடாமலே பிரமோஷனும் ஆய்விட்டது. ஏனென்றால் உபாத்தியாயர்களெல்லோரும் அதை வாசித்து வாசித்துக் குதூகலப்பட்டார்கள். முனிசிபல் சேர்மெனுக்கே பிரம்படி கொடுக்கும் முனிசிபல் ஹைஸ்கூல் பையனுக்குப் பரீட்க்ஷையில் எவ்வளவு மார்க்குப் போட்டால்தான் தகாது?

இதற்கு நான் எப்பொழுதும் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவன். கவிதையின் கீர்த்தியையும், பேனா முனையின் சக்தியையும் என்னுடைய பதினாலாவது வயதிலேயே கண்டு களிக்கும்படியாகச் செய்தவர் இவர்.

3

சென்ற பதினைந்து வருஷகாலமாய் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியர் பரோடாவில் திவானாக யிருக்கிறார். சுதேச சமஸ்தான மகா ராஜாக்களுக்குள் காலஞ்சென்ற கெய்க்குவார் மகாராஜா மகா புத்திமான். அவருடைய பூரண நம்பிக்கையைப் பெற்றவர். ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார். இந்தப்பதினைந்து வருஷகாலத்தில் திவானாக இருந்து ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பரோடா சமஸ்தானத்தில் நடத்தி வைத்திருக்கும் சீர்திருத்தங்களைப் பற்றி விபரமாய்ச் சொல்ல இது இடமல்ல. தமிழ் நாட்டின் பெயரையும் பெருமையையும் இவர் வட நாட்டில் நிலைநிறுத்தி வைத்திருக்கிறார்.

1881-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் திருச்சினாப்பள்ளியைச் சேர்ந்த **வாங்கல்** என்கிற கிராமத்தில் பிறந்தவர். டிப்டி கலெக்டர் முதற்கொண்டு திவான் பதவி வரையில் அடைந்து பல பதவிகளிலிருந்து நமது நாட்டின் வாழ்வை முன்னேற்றமடையும்படிச் செய்ய பல துறைகளில் பாடுபட்டவர். நெடுநாள் இப்படியே வாழ்க!

காலடி ஓசை கேளாமல் காரியத்திலே கண்ணாய், குழப்பம், சச்சு முதலியன இல்லாமல் சாமர்த்தியமாய்க் காரியத்தை நடத்திவைக்கும் திறமைவாய்ந்தவர் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார். இனம் தெரிந்தவர். தானும் வியர்க்காமல் உழைக்கும் உழைப்பாளி; பிறரிடமும் வழி தெரிந்து வேலையை வாங்குபவர். சொல் குறைவு. செயல்நிறைவு. சொல்லில் ஆடம்பரமில்லை; அரசியல் பகட்டும் அகடவிகடமுமில்லை உண்மை உண்டு. கனவுகள் பல இருந்தாலும், தற்காலத்தில்செயலாக்கக்கூடிய கனவுகள் எவை என்று தெரிந்தெடுத்து விடாமுயற்சியுடன்பாடுபடுகிறவர். பொது ஜனங்களும் கிராமவாசிகளும் பொருளாதார முறையில் முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்தியாக அடைந்தவர். இதுவே அரசியலின் முக்கியக் கண்ணாகும் என்ற கொள்கையைக் கொண்டவர். விஞ்ஞானத்தின் லாபத்தையும், செல்வச் செழிப்பையும், தான்ய லக்ஷ்மியின் கடாக்ஷத்தையும் கிராமவாசிகள் அடையவேணுமென்ற எண்ணத்தைப் பூரணமாகக் கொண்டவர் இந்தப் பதினைந்து வருஷ காலத்தில் பரோடாவில் கிராம முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களை ஏற்படுத்தி நடத்திவருகிறார். முருகன் வாழ்த்து இவருக்கு.

சுராஜ்யம் பெற்ற இந்தியாவின் புத்துயிர்த் திட்டத்திற்கு, ஸர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் திறமையும் தொண்டும் அடிப்படையாகும். ஈசனின் அருளை நான் வேண்டுகிறேன்.

# ஸாயி நாதரின் பெருமை

பி. எஸ். வரதராஜய்யர்—கல்கத்தா

**ஹே** பிரபு, உமது பெருமையைப் போற்றவும் உமது அருளாலேயே ஆகுமன்றி எனது முயற்சியால் இயலாது. உமது கல்யாண குணங்களும் அற்புதங்களும் அடியேனது அகக்கண்முன் திரள் திரளாக மிதந்து இயங்குகின்றன. உமது கருணை ஒன்றே சாகரம் போன்று அவ்வளவு பெரியது. அதில் ஒரு திவலை தெறித்தது. அதைப் பாரத மணிக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

அவருடைய கருணை வருணனைக்கடங்காதது. அதன் பண்பை அனுபவத்தாலன்றி அறிய முடியாது. அவர் தம் வாழுநாட்களில் பெரும் பகுதியைச் சீரடி என்னும் கிராமத்தில் கழித்தார். சீரடி என்பது டோண்டு என்னும் ஊரிலிருந்து மண்மாடுக்குப் போகும் இருப்புப்பாதையில் கோப்பர்கான் என்னும் புகைவண்டி நிலயத்திலிருந்து சுமார் 3மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமம். இந்தக் கிராமத்திலே ஸ்ரீ ஸாயிபாபா தினந்தோறும் நூற்றுக்கணக்கான எழை மக்களுக்கு அன்னமிட்டுப் பின் தாம் யாசித்து உண்பார். இந்த அவதார புருஷர் என் ஒரு சிறு கிராமத்தைத் தமது வாசஸ்தலமாகக் கொண்டார் என்பது கவனிக்கத்தக்கது. நமது நாட்டினரின் உண்மையான நிலைமையை நாட்டுப்புறத்திலேதான் காணமுடியும். எளியவர்களை, எழைகளை, பாமரர்களை, பசியால் மெலிந்து வெயிலால் உலர்ந்து பனியால் நனையும் மக்களை கிராமங்களிலேதான் அதிகமாகக் காணமுடியும். அப்படிப்பட்டவர்களுக்கிடையில் வாழ்ந்து அவர்களுடைய குறைகளை நீக்கியருளினர் இப்பெரியார்.

நமது தேசம் ஒரு சிறு கண்டம். அவ்வளவு பரப்பளவையுடையது. இதற்குச் சாப்பாடு போடுவது யானையைக் கட்டித் தீனி போடுவது போன்ற காரியம். ஏராளமான ஆலைகளை நியமித்து அவற்றால் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு நாட்டின் நிதியைப் பெருக்கி விடலாம் என்று நினைப்பது சரியல்ல. சிறிதளவு ஆலைகள் வேண்டியதுதான். ஆனல் நமது நாட்டினரின் மனப்பான்மைக்கும், ஆசாரத்துக்கும், நாட்டினது நீர்வள நிலவளப்பத்துக்கும் கிராமப் புனருத்தாரண வேலையே பொருத்தமானது. விவசாயத்தை விருத்தி செய்யாது பர்மாவிலிருந்து அதிகப்படி அரிசி வாங்கிய நாம் திண்டாடுகிருேம். நமது கரும்புத்தோட்டங்களை அதிகரிக்காமல் ஜாவாவிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்த நாம் காப்பி குடிக்கச் சர்க்கரை கிடைக்காமல் கஷ்டப்படுகிருேம். உணவுப் பொருள்களை ஏராளமாக விருத்தி செய்யுங்கள் என்று அரசாங்கத்தார் விளம்பரம் செய்கிருர்கள். நமது சமய குருவாகிய ஜகத்குரு ஸ்ரீகாமகோடி பீடாதிபதியும் இந்தக் காரியத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது.

"பசித்தோர் முகம்பார்" என்று பாடுகிருர் பட்டிணத்தார். அவர்களுடைய முகம் பொலிவுறக் கிராமப் புனருத்தாரண வேலைசெய் என்று 'பாரத மணி' பாடுகிறது.

ஸ்ரீ ஸாயி நாதர் தெய்வீக சக்தியுடையவர். அவர் தெய்வம். அவர் இருந்த இடத்திலே செல்வத்தை ஆக்க வல்ல திறமை வாய்ந்தவர். நாம் அவருடைய அருளால் பெரிய காரியங்களைச் செய்யலாம். தெய்வப் புலவர் கூறியபடி 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்!, நமது உழைப்பும், முயற்சியும் அவரது அரு

ளோடு கலக்க வெற்றி நமக்கு நிச்சயமாய்ச் சித்திக்கும்.

கிறிஸ்துவப் பாதிரிகளும், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆதீன கர்த்தாக்களும், கல்விச்சாலைகள், ஔஷதாலயங்கள் முதலியவற்றை ஸ்தாபித்து அவற்றின் மூலமாகத் தமது கொள்கைகளைப் பரப்புகிறார்கள். இது கவனிக்கத்தக்க விஷயம். இகத்துக்கான சௌகரியத்தைச் செய்து கொடுத்துப் பிறகு நமது மக்களின் ஆன்ம லாபத்தைத் தேடுவது சுலபமான காரியம். இந்த உபாயத்தை மேற்கூறப்பட்டவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆஸ்திக புத்தியுள்ள நமது நாட்டுப்புறத்து பணக்காரர்கள் கிராமப் புனருத்தாரண வேலைக்குப் பணம் வேணுமென்றால் பின் வாங்குவார்கள். ஒரு பெரியோரது ஞாபகத்துக்காக சமாஜம் ஒன்றை ஸ்தாபித்தால் அதற்கு ஏராளமாகப் பொருளை தானம் செய்வார்கள். அந்த நிதி கிராம வேலைக்கு உபயோகப்படும். உதாரணமாக ஸ்ரீ ஸாயி நாதர். ஞாபகார்த்தமாக கல்விச் சாலைகளும், கைத்தொழில் சாலைகளும், கூட்டுறவுச் சங்கங்களும், ஸ்தாபிக்கப்படலாம். ஈஸ்வர கைங்கரியமும் லோகோபகாரமான சேவையும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்ரீ ஸாயி பாபா பக்த சமாஜம் ஒன்றை ஸ்தாபியுங்கள். ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமி அவர்களை அழைத்து உபன்யாசம் செய்யச் சொல்லுங்கள். (அவர்களுடைய விலாஸம்:— 2/14, T. S. V. K. Street, Mylapore, Madras) நோயாளிகளுக்கு ஸ்ரீ பாபாவின் உதியையும், வாரத்தில் ஒருநாள் அன்னதானத்தையும் வழங்குங்கள். அப்புறம் நடக்கும் காரியங்களைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உதி, மேற்சொன்ன விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ ஸாயிநாதர் அவதாரத்தில் பகவான் ஒரு அற்புதமான லீலையைச் செய்கிறார். அவர் ஜனங்களுக்கு அன்னம், வஸ்திரம், ஸ்வர்ணம், ஆரோக்யம், ஸௌபாக்யம், சந்தானம் முதலிய சகல சம்பத்துக்களையும் ஆகாசத்தைப்போல வர்ஷிக்கிறார். பிறகு ஆன்மாக்கள் மோக்ஷசாதனம் அடையவேண்டிய மார்க்கத்தைக் காண்பிக்கிறார்.

ஸ்ரீ ஸாயிபாபா பக்தசமாஜம் ஒன்றைக் கல்கத்தாவிலே ஸ்ரீ S. P. R. நாயுடு அவர்கள் 1941-ம் ஆண்டு ஸ்தாபித்தார். அந்த வருடம் முதலாவது ஞாயிற்றுக் கிழமையில் சுமார் நூறு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அன்று முதல் இன்றளவும் ஒரு ஞாயிற்றுக் கிழமைகூடத் தப்பாமல் அன்னதான கைங்கர்யம் நடைபெற்று வருகிறது. இப்பொழுது 300 பேர்களுக்குக் குறையாமல் சாப்பிடுகிறார்கள். இந்த நகரில் அநேகம் பேர்கள் உதியின் மஹிமையால் பல நோய்களிலிருந்து குணமடைந்திருக்கிறார்கள்.

நீங்களும் உங்களுடைய கிராமங்களில் ஸ்ரீ ஸாயிநாத பக்த சமாஜங்களை நியமித்துப் பல சத்கர்மங்களைச் செய்து ஸ்ரீ பாபாவின் பேரருளைப் பெறுமாறு பிரார்த்திக்கிறேன்.



# " இன்று செய்யவேண்டியது யாது? "

(வித்வான் பி. சேதுராவ்—ரிஷிவேல்லிபள்ளி)

உலகம் சுழல்கின்றது. காலசக்கரம் மாறிவருவது கண்கூடு. உலகின் நாற்புறமும் பீரங்கியின் சத்தமும் குண்டுகளின் சத்தமும் காது செவிடு படுமாறு தோன்றுகின்றது. உலகப் பிரச்னை இறந்து விடுவதா? அல்லது இருப்பதா என்பதாகும். இன்றைக்கு முடி மன்னனாக இருப்பாரை நாளைக்கும் இருப்பரென்று எண்ணவோ இடமில்லாத நிலையாக இருக்கின்றது. உலகில் இவ்வளவு பயங்கரமான யுத்தமேகங்கள் கர்ஜிக்கக் காரணந்தான் என்ன? தனி ஒரு மனிதனுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாத குறையினுல் அல்லவா? உலக மக்களுக்கு உண்ண உணவு கிடைத்தால் சண்டை எங்கிருந்து உண்டாகும்? ஒருக்காலும் சண்டை தோன்ருது. ஏன் மக்கள் ஒருவரைக் கண்டு பிறர் பொருமை கொள்கின்றனர்? இல்லாத குறையால் அல்லவா? தனி மனிதனுக்கு உணவு இல்லையெனின் சகத்தினையே அழிக்கப் புறப்பட்ட பாரதியாரும் ஒருவன் உலகில் யாசித்துப் பிழைக்க நேரிடுமானுல் அவனை இயற்றிய பிரமன் கெடுக என்று சாபம் இட்ட வள்ளுவரும் எதனை இன்றியமையாததாகக் குறிப்பிட்டனர்? உணவைப் பற்றியன்றே? பசிவந்திடப் பத்தும் பறந்து போம் என்பது பொய்யா? பசியைப் பிணியாகவே தெய்வப் புலவரும் கூறினர். ஒரு மனிதன் அழுக்காறு கொள்ளின் அவன் சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

இத்தகையத் தீர்த்தற்கரிய பசிக்கு மருந்தாகிய உணவுப்பொருள்கள் நம் நாட்டில் எந் நிலையில் உள்ளது? ஒரு ஜில்லாவில் உள்ள உணவுப் பொருள்கள் பிறிதொரு ஜில்லாவிற்குச் செல்லக் கூடாது. ஆகவே உணவுப் பொருள்கள் உண்டாக்கப்படாத பிரதேச மக்கள் எங்ஙனம் உயிர் வாழமுடியும்? கேள்வி எளிது. ஆனல் விடை கடினம்.

நம் இந்திய நாடு கல் தோன்றி மண் தோன்ரு காலம் முதல் மக்களால் நெருங்கி வசிக்கப்படும் நாடு. நம் நாட்டில் மக்களின் பெரும்பான்மையாளரின் தொழில் விவசாயத் தொழிலாகும். நம் தாத்தா உத்தியோகமா செய்தார்? இல்லை நாள் முழுவதும் பூமியைத் திருத்தி உண்டார். ஏரைக் கொண்டார். சீரைக் கொண்டார். நிலமென்னும் நல்லான் அருள்கொடுத்தான். நிலத்தில் ஒன்றுக்குப் பத்தாக விளைந்தது. வயல்கள் தோறும் தாமரைகளைக் களையாக எடுத்தனர் என்றும் அன்னம் பொலியும் வயல் சூழ்ந்த அணி ஆரூர் என்றும் யானைகள் மறையுமாறு உயர்ந்த செஞ்சாலிக் கதிர்கள் என்றும் கவிகள் கூறியன முற்றிலும் பொய்யா? வயலில் உழுது பயிர் செய்து வாழ்வதையே கண்ணும் கருத்துமாகக் கொண்டு நம்முடைய முன்னேர் வாழ்ந்து வந்தனர். அதிகாலையில் எழுந்திருந்து பல்குச்சியைக் கைக்கொண்டு தலைப்பாகையையாகக் கட்டிக்கொண்டு கிளம்பினர் என்ருல் பெரியோர் உச்சிக்காலத்தில்தான் திரும்பி இல்லம் அடைவர்! பின்னர் உண்டுறங்கி மீண்டும் மாலையில் வயலை சுற்றிப் பார்த்து இரவு வீடு திரும்புவார். வயலிற்குச் சென்று வருதலைக் கவுரவமாகக் கருதினர். ஏழை யெளியவர்களுடன் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஏழை மக்களின்

இன்ப துன்பத்திற்கு எற்ப முதலாளிகள் நடந்துவந்தனர். முதலாளிகள் தினமும் இருமுறை வயலிற்கு வருவதால் வேலையாட்களும் கண்ணும் கருத்துமாக வேலை செய்துவந்தனர்.

முன்னாளில் மக்களின் உடல்நிலை எந் நிலையில் இருந்தது! கட்டுமஸ்தான தேகத்துடன் தீர்க்க திருஷ்டியையும் அஞ்சாத நெஞ்சையும் கிளர் ஊக்கத்தையும் கொண்டு வாழ்ந்து வந்தனர். கண்ட கண்ட இடங்களில் கண்ட காலங்களில் அகப்படும் உணவுகளையெல்லாவற்றையும் வயிற்றுக் களஞ்சியத்தில் அடைத்து வைக்கவில்லை. உணவு நெறி கொண்டனர். பசிக்கவே புசிக்க வேண்டும் என்றும் உழைத்துப் பசியை உண்டாக்குவர் என்றும் அறிய வேண்டும். முன்னோர் அளவுக்கு மிஞ்சி உணவு உட்கொள்ளவில்லை. வியாதி வருவது பெரும்பாலும் காலவேளை தவறி உண்ணுவதாலும் அளவு மீறி உண்பதாலுமே என்று வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார். வைத்தியனுக்குக் கொடுக்கும் பணத்தை வாணியனுக்குக் கொடு என்பது பொய்யா? 90-வயது ஆகியும் கண்பார்வை குன்றுமல் தீர்க்கதரிசிகளாய்க் காணப்பட்டனர்.

நாமோ வெட்கம்! வெட்கம்! ஒவ்வொரு காரியத்திற்கும் பிறரையே எதிர் நோக்குகின்றோம். கொடியில் உலரும் வேஷ்டியை எடுத்துக் கொடுத்தும் சாதத்தைக் குழைத்துக் கொடுத்தும் வேஷ்டிகளைத் துவைத்துக் கொடுத்தும் தொண்டு செய்யுமாறு தம் மனைவியரை எதிர்பார்க்கும் கொடுமையாளராக இருக்கின்றோம். அவரவர் அன்றாட வேலைகளைச் செய்யாதவரா உழவுத் தொழில் செய்து நாட்டின் உணவுப் பொருள்களை மிகுதியாக்கப் போகின்றோம்? தற்கால வாழ்க்கை அடிமைத் தனத்தை வளர்ப்பதாய் உடல் உழைப்பைத் தாராததாய் நாகரிகமான வாழ்வையே கற்பிக்கின்றது. தங்களுடைய நிலங்களைப் பார்க்காது குத்தகைதாரர் கொடுக்கும் பணத்தை மட்டும் கொண்டு திருப்தியடையும் மக்கள் எத்தனைபேர் உளர் தெரியுமா? பூமியைத் திருத்துதல், வாய்க்கால் வெட்டுதல், எருவிடுதல், ஏர் உழுதல், விதையிடல், நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் முதலிய வேலைகள் யாவற்றையும் முதலாளியே நேரில் சென்று கவனிக்கவேண்டும். இன்றேல் வேலைகள் சோம்பல் காரணமாகவும் ஏமாற்றப்படுதல் காரணமாகவும் திறமின்றிச் செம்மைபெறுது போகின்றன. பிறகு இறுதியில் மகசூல்பணம் குறைகின்றது. மகசூல் மிக்கவர் அல்லவா பெண்களுக்கு ஆயிரக்கணக்காக ரூபாய்கள் வரதட்சிணையாகவும் ஆயிரக்கணக்கில் மக்கள் படிப்பிற்கு செலவிட முடியும்? தற்காலத்தில் வரும்படி குறையக் குறைய செலவினங்கள் மிக்குப் போகின்றன. ஆகவே நிலமுடையவர் செலவைக் குறைக்க வகை தெரியாது வருடத்தில் ஒரு சிறு பகுதியை விற்க ஆரம்பிக்கின்றனர். இங்ஙனம் சில நாட்கள் ஆகி சில வருடங்களில் தலையில் துணிபோட்டுக் கொண்டு போகும் நிலையில் வரவேண்டியுள்ளது.

ஆனதுபற்றி உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் தற்காலத்தில் எத்தொழில்களிலும் சிறந்ததாகிய உழுதொழிலைக் கைக்கொள்ளப் பின்வாங்கக் கூடாது. இத் தொழிலால் நல்ல பயனைப் பெறலாம். உணவுப் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தால் தாங்களும் தங்களைச் சார்ந்தவரும் நன்கு வாழலாம். நிலத்தை லக்ஷ்மி வாசம் செய்யும் இடமாகக் கருதவேண்டும். நிலத்தில் எத்துணைக் கவலையும் சிரத்தையும் செலுத்தினுலும் வீண் போகாது. உழுதொழில் மிகவும் பரிசுத்தமான தொழில். பொய்மை, அழுக்காறு, பரிதானம் இல்லாத தொழில். ஆதலாலேயே வள்ளுவர் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்" என்றார்.

தினமும் சினிமா பார்த்துக் காசைக் கரியாக்காமல் உல்லாசப் பிரயாணமாக நிலத்தை இருமுறை சுற்றி வருவோம். எந்த எரு இட்டால் எளிதில் மிக்க பயன் கிடைக்கும் என்பதை ஆலோசிப் போம். நம் வெண்ணெய்நல்லூர்ச் சடையன் வள்ளலாய்த் திகழ்தற்குக் காரணம் வேளாண்மைத் தொழில் அன்றே! வேளாண்மைத் தொழில் அன்றே உம்பரும் போற்றும் கம்பரைக் கொடுத்தது. உணவுப்பஞ்சம் நாட்டில் இன்னும் தலைதூக்கித் தாண்டவம் புரியுமேல் ஒரு காலத்தில் ஒரு கவளம் சோறும் ஒரு முழம் உடையுமின்றித் தவிக்கும் காலம் வந்துவிடும். ஆகவே வருமுன் காப்போராய் உழவுத்தொழில் செய்து நாட்டைக் காப்போம் வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகளைப் போட்டுப் பயிர்செய்வோம் உழவுத் தொழிலை உயிரைக்காக்கும் நன்கைத் தொழிலாகக்கொண்டு முன்னேறுவோமாக.

---

1938-39-ல் 230,556 பள்ளிக்கூடங்கள் இருந்தன. 1929-30-ல் இந்தப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்ற மாணவர்களின் தொகை 125லட்சம். 1938-39-வது வருஷத்தில் 145லட்சம் ஆகிவிட்டது. இதற்காக ஏற்பட்ட சிலவு 28 கோடி ரூபாய்!

* * * * * *

இந்தியன் ரயில்வே திட்டம் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு பெரிய தொழில் திட்டமாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள மொத்த ரயில்களின் நீளம் 41 ஆயிரம் மைல். அதில் 33 ஆயிரம் மைல் சர்க்காருக்கே சொந்தமாய் நடத்தப்படுகிறது. இதில் சர்க்கார் போட்டிருக்கும் முதல் 755 கோடி. 1941-ம் வருஷத்தில் செலவுபோக சர்க்காருக்கு மிச்ச லாபம் 28கோடி.

* * * * * *

ஒரு அழகிய தோட்டத்தின் நடுவே இருக்கிறது ரோமெய்ன் ரோலந்தின் வீடு.

கதவைத் தட்டினேன். வயது முதிர்ந்த வேலைக்காரக் கிழவி ஒருத்தி கதவைத் திறந்து, புலித்தோல் விரிக்கப்பெற்ற ஒரு அறையில் உட்காரும்படி கூறினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ரோமெய்ன் ரோலந்தின் மனைவி அவ்வறைக்கு வந்து என்னை வரவேற்று உபசார வார்த்தைகள் கூறினாள்.

ரோமெய்ன் ரோலந்து காலை முழுதும் பூஜை செய்வார் என்றும், மாலையில்தான் அவரைப் பார்க்கலாம் என்றும் சொல்லி, நான் தங்குவதற்காக அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்தாள்.

ஏ. கே. செட்டியார்,
(பிரயாண நினைவுகள்)

# தியாகராஜ வைபவம்

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

தியாகராஜர் சங்கீதப் பிரபஞ்ச சக்ரவர்த்தி என்ற உண்மை எல்லோரும் ஒத்துக்கொண்ட விஷயம். அவர் சரித்திரம் யாவருக்கும் தெரியும். அவருடைய கீர்த்தனங்கள் வீடுகளிலோ சபைகளிலோ நாடகமேடைகளிலோ பேசும் படக்காட்சிகளிலோ, வானொலியிலோ, இசைத்தட்டிலோ கேட்காத நாளில்லை. ஆனாலும், இக்கட்டுரையை சில அறிய உண்மைகள் வெளிப்படுவதற்காக மட்டும் எழுதுகின்றேன். அவருடைய 96-வது ஆராதனை ஜனவரி மாதம் 26உ நம்முடைய புண்ணிய தேசம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

அவருடைய உள்ளுணர்ச்சியை நன்கறிய வேண்டுமானால் நம்முடைய நாட்டில் தோன்று தொட்டு வந்திருக்கும் கலை உணர்ச்சியையும், மத உணர்ச்சியையும் அறியவேணும். இரண்டு உணர்ச்சியின் இதயம் அழகும், அன்பும், ஆனந்தமும் ஆகும். கடவுளின் வடிவம் அழகு அன்பு ஆனந்தம். அவ்வுணர்ச்சி கட்டுக்கடங்காமல் கரைபுரண்டு வரும் வெள்ளம்போல பெருகினால் பக்தியும் கலை ஞானமும் ஓங்கி வளர்கின்றன. இந்த உண்மையை பரம்பரையாக யுகம் யுகமாக அனுபவித்த நாடு நம்முடைய தாய் நாடு.

பாடல் அல்லது சங்கீதத்தின் மர்மத்தை நன்கறியவேணுமானால் மூன்று சிறிய கதைகளால் அறியலாம். நாரதர் தன்னுடைய பூர்வ சரித்திரத்தைப் பாகவதத்தில் கூறுகின்றார். அவர் சிறுவனாக இருந்த பொழுது சில அடியார்களிடமிருந்து அவர்கள் வேறிடம் போகும் சமயத்தில் மந்திர உபதேசம் பெற்றார். அவர் தாய் பாம்பு தீண்டி இறக்கவே திக்கற்றவர் ஆனார். அப்பொழுது திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்ற மூதுரைப்படி அவர் அந்த மந்திரத்தை ஜபம்செய்துவந்து கடவுளைத்தன்னுள்ளத்தில் கண்டார். அந்த ஒளியில் ஈடுபட்டு தன்னைமறந்து மயிர்ச்சிலிர்த்து, இன்பக்கண்ணீர் பெருகி, மனம் லயித்து இருக்கும்பொழுது பகவான் சொன்னசொல் அவருக்குக் கேட்டது. "இந்தப்பிறவியில் உனக்கு இவ்வளவு தரிசனம்தான் கிடைக்கும். இதை நினைத்து நினைத்து மனமுருகி பக்திசெய்தால் அடுத்த பிறவியில் பேரின்பம் அடைவாய்" என்ற உபதேசத்தைக் கேட்டார். அந்தப்படியே அவர் தன் பிறவியைக் கழித்து அடுத்த பிறவியில் பிரம குமாரனான நாரதராகப் பிறந்து வீணையும் கையுமாக மூவுலகமும் சென்று கடவுளைத்துதித்துப் பாடி தானும் இன்பவடிவமாக இருந்து துன்பமிகுந்த சகல ஜீவர்களையும் இன்பமயமாகச் செய்கின்றார்.

இந்த பக்த சிகாமணியும் சங்கீத சிகாமணியுமான நாரதரைப்பற்றி இரண்டு கதைகள் உண்டு. ஒரு காலத்தில் கிருஷ்ண பரமாத்மா நாரதரைமெச்சி "நீ பரமசிவனிடத்தில் பாடி அவர் மெச்சினால்தான் உன்னுடைய கலைக்குப் பெருமை" என்றார். நாரதருக்கு மிக சந்தோஷம். இருவரும் கைலாஸம் போகும் வழியில் ஒரு நந்தவனத்தில் சில பெண்மணிகள் கை கால் முறிந்து அங்க ஹீனர்களாக அழுவதைப் பார்த்தார். அவர்களைப் பார்த்து உங்களுக்கு ஏன் இந்த நிலை வந்ததென்று வினவினார். அவர்கள் "நாரதன் என்ற ஒருவன் பாடுகிறானாம். நாங்கள் ராகதேவதைகள். அவன் தவறாக, தாறுமாறாகப்பாடுவதால் எங்களுக்கு கை கால் முறிந்து இந்த கதிவந்தது" என்றுரைத்தார்கள்.

இதைக் கேட்டதும் நாரதருக்குத் தன் பெருமையைப்பற்றி முன்னிருந்த உணர்ச்சி பறந்து போய்விட்டது. கிருஷ்ண பரமாத்மாவிடத்தில் மன்னிப்பு கேட்டுக் கொண்டு பரமசிவனிடத்தில் கான வித்தையை கர்வமில்லாமல் கற்று சங்கீதக் கலையின் பூர்ண சுருபம் அறிந்தார்.

இன்னுமோர் வேடிக்கையான கதை உண்டு. ஒருசமயம் நாரதர் போகும் வழியில் ஹநுமாரைக் கண்டார். ஹநுமார் மகாபக்தர். உத்தம சங்கீத வித்தையில் தேர்ச்சி யடைந்தவர். அவர் பாடியதைக் கேட்டு நாரதர் பிரமித்துப் போனார். தன்னுடைய வீணையைக்கீழே வைத்துவிட்டு மனம் லயித்து ஹநுமாருடைய பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தார். எந்தப்பாறையில் வீணையை வைத்திருந்தாரோ அப்பாறை உருகியது. பாட்டு நின்றதும் உருகியபாறை கெட்டிப்படவே வீணை அதில் சிக்கிக்கொண்டது. அதை நாரதரால் எடுக்க முடியவில்லை. ஹநுமார், அவரைப்பாடி கல்லை மறுபடியும் உருக்கி வீணையை எடுத்துக் கொள்ளலாமே என்றார். நாரதர் எவ்வளவோ பாடியும் கல், கல்லாகவே இருந்தது. மறுபடியும் ஹநுமார்பாடவே கல் இளகிற்று. நாரதர் தன் வீணையை எடுத்துக்கொண்டு ஹநுமாரை வணங்கி மனமாறத்துதித்து அகந்தை அடங்கிச் சென்றார்.

இக்கதைகளிலிருந்து என்ன தத்துவங்கள் வெளியாகின்றன. நம்முடைய தாழ்மையையும் கலையின் பெருமையையும் கடவுளுடைய மகிமையையும் நாம் எப்பொழுது உணர்கின்றோமோ அப்பொழுதுதான் கடவுளையும் அறியமுடியும்; கலையையும் அறியமுடியும். இந்த உயர்ந்த உண்மையைத்தான் நாம் முக்கியமாக தியாகராஜருடைய திவ்ய சரித்திரத்திலிருந்து முக்கியமாக அறிய வேணும்.

தியாகராஜருடைய தந்தை ராம பிரஹ்மம்; தாய் சாந்தாதேவி. தியாகராஜர் 1759-ம் வருஷத்தில் பிறந்தார். அவர் பிறந்த ஊர் திருவாரூர், வளர்ந்த ஊர் திருவையார். திருவையார் ஸம்ஸ்கிருத காலேஜில் வால்மீகி ராமாயணத்தைப் படிக்கும் பாக்கியத்தைப் பெற்றார். அந்த ஒப்புயர்வற்ற தெய்விக நூல்தான் அவருடைய ராம பக்திக்கு வேர். ஆனால் அவருடைய உள்ளத்தை இழுத்தது சங்கீதக் கலையே. தஞ்சை சமஸ்தான வித்வான் ஸொண்டி வேங்கடரமணய்யா என்ற வீணை வித்வானிடம் சங்கீதம் அப்யாசம் செய்தார். நாரதரே ஒரு சன்யாசி உருவத்துடன் வந்து ஸ்வரார்ணவம் என்ற சங்கீத நூலை அவருக்கு அளித்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றார்கள். தியாகராஜர் ஸ்வரார்ணவம் என்ற நூல் பரமேச்வரனே பார்வதி தேவிக்கு உபதேசித்ததாகக் கூறுகின்றார். அவருடைய **ஸ்வரராக ஸுதாரஸ** என்ற கீர்த்தனையில் தன்னுடைய இன்ப உணர்ச்சியை பூர்ணமாக வெளியிட்டு இருக்கின்றார்.

தியாகராஜர் திருவையாரில் வசித்த வீடு ஒரு சிறு வீடு. அதையும் அவர் பூஜைசெய்த ராம படத்தையும் பார்க்க நான் திருவையாருக்குப் போனேன். அவர் ஒரு அழகிய ராம விக்ரஹத்தையும் பூஜை செய்து வந்தார். அனேகர்கள் கிருஷ்ணபரமாத்மாதான் சங்கீத தெய்வம் என்று கருதுவார்கள். ஆனால் வால்மீகி என்ன கூறுகின்றார்.

**गन्धर्वे च भुवि श्रेष्ठो बभूव भरताग्रजः ।**

ராமர் குசலவர்கள் கானத்தை அநுபவித்த மாதிரி உலகத்தில் ஒருவருமே அநுபவித்திருக்க முடியாது.

ஒரு சமயத்தில் தியாகராஜருடைய தமையன் பொறாமையால் தியாகராஜர் ஆராதித்துவந்த ராமவிக்ரஹத்தை காவேரியில் எறிந்து விட்டார். அப்பொழுது மனம்நொந்து தியாகராஜர் லோகோத்தரமான **எந்து தாகிநாடு** என்ற கீர்த்தனத்தைப்பாடினார். **நேநெந்து வேதகுதுரா** என்ற உருக்கமான கீர்த்தனத்தை

யும் பாடினர். பிறகு ராமன் அருளால் விக்ரஹம் இருந்த இடத்தை அறிந்து அதை அடைந்து அவர் பிரமானந்தம் எய்தி **எட்லநிரகிநிவோ, ஸல்லரே** என்ற கீர்த்தனங்களைப்பாடி உள்ளங் களிந்து களித்தார்.

தியாகராஜர் உஞ்சு விருத்தியாலேயே பிழைத்து வந்தார். பிறரிடம் சென்று கலையைவிற்று அவர் பிழைக்கவில்லை. சங்கீதக்கலை ராமார்ப்பணம் மட்டும்தான். **நிநிகலாசுகமா ராமுனி சந்நிநிகாலசுகமா** என்ற அழகியகீர்த்தனையில் அவருடைய உண்மையான முழு மனதை அவர் வெளிப்படுத்தி இருக்கிறார். தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி அவரை வந்து தன் பேரில் கீர்த்தனங்கள் செய்து தான் கொடுக்கும் பூதானம் சுவர்ணதானம் பெற்றுக் கொள்ளும்படி அவருக்கு ஆள் அனுப்பிய பொழுதுதான் அந்த கீர்த்தனத்தை தியாகராஜர் பாடினர். உத்தம சங்கீத வித்வானும் ரஸிகருமான திருவாங்கூர் மகாராஜா சுவாதித் திருநாள் தன்னிடம் ஆள் அனுப்பியும் தியாகராஜர் அவரிடமும் போகவில்லை. அக்பர் காலத்தில் இருந்த மகா சங்கீத வித்வான் டான்ஸன் குருவான ஹரிதாஸ் சுவாமியின் குணமும் அப்படித்தான் இருந்தது. துறவிக்கு வேந்தன் ஒரு துரும்பு என்ற உண்மை பாரத நாட்டில் பிறந்து வளர்ந்த புண்ணிய தத்துவம்.

இப்படியே கடவுள் வழிபாட்டிலேயே தியாகராஜர் காலங்கழித்தார். அவரிடம் அனேகச் சிடர்கள் சங்கீதக் கலையை கற்றுத் தேர்ச்சி யடைந்தார்கள். அச் சிடர்களில் உமையாள்புரம் சுந்தரம் ஐயர், கிருஷ்ண ஐயர் என்ற இருவர்களை நான் பார்த்தும் பாடிக் கேட்டும் இருக்கிறேன்.

அவருடைய உத்தம குணங்களில் சிறந்த குணம் அசூயையே இல்லாமல் குணமுள்ளவர்களைப் போற்றும் குணம். திருவாங்கூர் சங்கீத வித்வான் கோவிந்த மாரார் ஆறுகால பல்லவி (பட்டால பத்ததி) பாடினதைக்கேட்டு மெச்சி **எந்தரோ மகாநுபாவுலு** என்ற கீர்த்தனத்தைப் பாடினர். இது நடந்தது 1838-ல்.

அவருடைய பக்தி சமரச பக்தி. ராமனுடைய பக்தியால் அவருக்கு சிவத்துவேஷம் அணுகூட இல்லை. எல்லா தெய்வங்களைப் பற்றியும் அவர் பாடியிருக்கின்றார். அவர்களையெல்லாம் ராமனுடைய திருவுருவங்களாகவே கூறுகின்றார். ராமனை பரபிரஹ்மமாகவே உறைக்கின்றார். **எவரனி நிர்ணயஞ்சிநிரா** என்ற




## சந்தாதாரர்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்து சேராவிட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

'பாரதமணி' காரியாலயத்தார்.

கீர்த்தனையில் ராம என்று எழுத்துக்கள் அஷ்டாக்ஷர பஞ்சாக்ஷர மந்திரங்களுடைய ஜீவாக்ஷரங்கள் என்று உபதேசிக்கின்றார். இந்த உண்மையைத்தான் உபநிஷதங்களும் கூறுகின்றன.

**रमन्ते योगिनो यास्मिन् चिदानन्दे परात्मनि ।**
**एते राम परे नासौ परं ब्रह्माभिधीयते ॥**

தியாகராஜருடைய சங்கீதக்கலை உணர்ச்சி மிகவும் உன்னதமானது. **சங்கீத சாஸ்திர ஞானமு, ராகசுதாரஸ, ஆனந்த சாகரமே, சொகுசுக, மிருதங்கதாலமு, எந்துரு பெத்தல்** முதலிய கீர்த்தனங்கள் சங்கீத மர்மங்களை வெளியிடுகின்றன. யாகம், யோகம், தியாகம், போகம், மோக்ஷம், ஆனந்தம் எல்லாம் சங்கீதக் கலையில் அடங்கி உள்ளதாக அவர் உணர்ச்சி உபதேசம். **மோக்ஷமுகலதா** என்ற உயர்ந்த கீர்த்தனையில் இந்த உண்மையை வாய்விட்டுக் கூறி இருக்கின்றார்.

'அநேக கிருதிகளைப் பாடியது தவிர அனேக கீர்த்தனை மாலைகளையும் பாடினார். **ராகரத்ன மாலிகை** என்ற சங்கீத நூலில் 100 ராகங்களில் 100 கீர்த்தனைகள் இருக்கின்றன. **பிரக்லாத பக்தவிஜயத்தில்** அனேக கீர்த்தனைகள் இருக்கின்றன. **நௌகா சரித்திரம்** வெகு அழகு ஸ்ரீகிருஷ்ணனும் கோபிகளும் யமுனையில் ஓடத்தில்போகும் பொழுது புயல் அதைக் கவிழ்க்க அவர்கள் கண்ணனிடம் சரணாகதி செய்ததை அது வர்ணிக்கின்றது.

தியாகராஜர் பராபவ வருஷம் தை அமாவாஸ்யைக்கு முந்திய பஹுல பஞ்சமியில் (6–1–1847) ஸித்தி அடைந்தார். அவருக்கு முன் அவருடைய மனைவி பரலோகஞ் சென்றாள். இன்னும் நான்கு வருஷங்களில் அவர் ஸித்தி அடைந்த நாளில் இருந்து நூறு ஆண்டுகள் முடிவடைகின்றன. அச்சமயத்தை சங்கீதக்கலையின் முக்கிய தேவதையின் முக்கிய திருவிழாவாக நம்முடைய நாடு முழுவதும் கொண்டாடவேணும். நம்முடைய நாட்டில் இப்பொழுது விளங்கும் புத்துயிர் பக்தியாலும் கலையாலும் என்பது உண்மையானால் அதற்கு இக்காலத்தில் மூலகாரணம் தியாகப்ரஹ்மம்.



# தான்யலக்ஷ்மி

சுவாமி சுத்தானந்த பாரதியார்

[ ஊரைச்சொன்னாலும் பேரைச்சொல்லாதே என்பார்கள்; நான் இரண்டையும் மாற்றி விட்டு உள்ளதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். ]

**கோயிலடி**: மிகவும் அழகான கிராமம்; அங்கே பள்ளிகொண்டுள்ள அப்பக்குடத்தானை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்; பலன் வயிறு நிரம்ப கிடைக்கும்; கோயில் பிரசாதம் திவ்ய நாமம்போல இனிக்கும்; அப்படி பிரசாதம் கிடைக்காவிட்டாலும், அதோ ராயர் சத்திரம் உள்ளது—வயிறு முட்ட சாப்பிடலாம்; இந்தச் சத்திரத்திற்கு அருகேதான் **மாதவராவ்** வீடிருந்தது; அவர் பணக்காரர்—பணம் என்றால் சீமை ராஜா முகம் போட்ட ரூபாய் அணா பைசா அன்று; செடிப்பவன்கூட அன்று இந்தப் "பணம்" என்ற வார்த்தையிருக்கிறதே, அதற்கு அர்த்தம் மாதவராவ் சொல்லிக் கேட்க வேண்டும்: அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்தது; நான் நாடு சுற்றும்போது கோயிலடியில் அப்பக்குடத்தார் பொங்கல் விநியோகம் சாப்பிட்டுவிட்டு, ராயர் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்தேன்; என் ஜபத்தின் பலனாகத்தான் ராயர்வாள் கட்பு எனக்குக் கிடைத்தது; எனக்கு கிராமப் பைத்தியம் அசாத்தியம், பசும் வயல்களும் சோலைகளும் சூழ்ந்த கோயிலடியைப் பார்த்ததுமே என் உள்ளம் சிலிர்த்தது: "ராயர்வாள் இந்த கிராமம் தான்ய லக்ஷ்மிக்குப் தனலக்ஷ்மிக்கும் வாசமாயிருக்கிறதே" என்று பேச்செடுத்தேன்.

**ராயர்**: அவள் கிடக்கிறாள் **தனலக்ஷ்மி**; மோசக்காரி;; அவளுக்கு விவஸ்தை கிடையாது, கைக்குக்கை மாறிக் கொண்டிருப்பாள். அவளை நம்ப முடியாது, திடீரென்று புதிய பளபளப்புடன் வந்து மினுக்கு வலைவீசுவாள் தான்யலக்ஷ்மி அல்லவோ வேண்டும்.

**நான்**: ராயர்வாள், தனலக்ஷ்மியை இப்படி வெளுத்துவாங்குகிறீர்களே; அவள் கோபம் பொல்லாததல்லவா? அவளில்லாமல் இந்தக்காலம் என்னசெய்ய முடியும்? ஒரு ஊருக்குப்போகமுடியுமா? பண்டம் வாங்கமுடியுமா? பட்டணம் பார்க்கமுடியுமா-ரயில்காரனும், சினிமாக்காரனும் தான்ய லக்ஷ்மியை லக்ஷ்யமே செய்யமாட்டார்களே.

**ராயர்**: ஓய் கிறுக்கு; இந்தப்பட்டணத்தான் பண்ணும் அந்தாதர்பார் தான் தான்யலக்ஷ்மியை மூலையில்ஒதுக்கி தனத்திற்கு இவ்வளவு இடங்கொடுத்தது. தனலக்ஷ்மி இப்போது **பணம்** என்ற புதுப்பெயருடன் பகட்டித் திரிகிறாள். பணம் என்றால் என்ன என்றுகூட இந்தக்காலத்து ஹாட்—பூட் பேர்வழிகளுக்குத் தெரியாது.

**நான்**: தெரியாமலா, ராயர்வாள் பைபையாக மூட்டைகட்டி, அவிழ்த்துக் கொட்டிக்கொண்டிருக்கிறார்கள்? பணம் என்றால் ரூபாய், அணா, பைசாதானே.

**ராயர்**: அதுதான் இல்லை ஐயா, இல்லை, அதற்கு நான் புதிய வியாக்யானம் கண்டுபிடித்திருக்கிறேன்.

**நான்**: அப்படியா சொல்லுங்கள் கேட்போம்!

**ராயர்**: பண் + அம்=பணம். பண் என்றால் செய் என்று பெயர் அம் என்றால் அழகு; வாழ்வை அழகு செய்வது பணம் வாழ்வை அழகு செய்வது எது? உழைப்புத்தான். பண் என்றாலே செயல், வேலை, உழைப்பு என்று

பொருள். நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட உழைத்து நிலத்தில் பாடுபட்டு விளைவிக்கும் பயிர்களே பணம்; அவை தாம், ஒரு கிராம வாழ்க்கையை அழகு செய்வன. **பணி** என்றால் வியாபாரச் சரக்கிற்கும், பண்டத்திற்கும் பெயர். பணம் என்றால் வேலைக்கும் பெயர். அகராதியைபாரும். உழைத்து விளைத்துப் பிழைப்பதுதான் **பணத்தை ஆள்வதாகும்.**

**நான்:** ஆஹா! அபூர்வமான வியாக்யானம்! உண்மை; இந்தக்காலம் பணத் திருவால் (தனலக்ஷ்மி) ஜனங்களுக்குத் திமிர் பிடித்துவிட்டது; அவளைக் கைக்குள் போட்டுக்கொண்டு பஞ்சமா பாதகங்கள் அழிநடம் புரிகின்றன. உழைப்பிற்கே மதிப்பில்லை; உழுது நட்டு நீர் பாய்ச்சி, உரம்போட்டு, வேலிகட்டி இரவும் பகலும் காவல்காத்து, வளர்த்து அறுவடை செய்து சூடடித்து தானிய மணிகளைப் பிரித்து களஞ்சியத்தில் குவித்து,மங்குமங்கென்று உரலில்குத்திப் புடைத்தெடுத்துக் கூடையில் அள்ளி அரிசி வருகிறது; இவ்வளவு பாடுபட்டு வந்த பண்டத்திற்கு மதிப்புஎது? நாற்பது வருஷத்திற்கு முன், நானறிய கிராமாந்தரங்களில் பணப்பழக்கம் கிடையாது; பண்டம்மாற்றே அதிகம். அக்காலந்தான் தான்யலக்ஷ்மிக்குச் சுக்கிர தசையாயிருந்தது; நெல்போட்டு இலந்தைப்பழம் நாவற்பழம் வாங்குவது போலவே, எல்லாப்பண்டங்களும் வாங்கினோம். தான்யவான்களே ஊரில் அதிக மாயிருந்தனர்.

**ராயர்:** இக்காலம் தனவான்களே அதிகம்; தனவான்கள் கனவான்களாகி உடம்பைத் தூக்கி நடக்கக்கூடச் செயலில்லாமல் மோடார் சவாரி செய்தார்கள்; பெட்ரோல்வாயில் மண் விழுந்தது; மோட்டார் துரைகள் குதிரைவண்டியில் போகிறார்கள்; கட்டை வண்டிகளுக்குக் கூட யோகம் வரும்போலிருக்கிறது.

**நான்:** இருக்கட்டும் ராயர்வாள்; தங்கள் உடம்பு சிலையாலடித்ததுபோல் இருக்கிறது; நடையோ சிம்மம்போல் இருக்கிறது; வயதாகியும் வாலிபத் தெம்பு தங்கள் கட்டுமஸ்தான தசைகளில் விம்முகிறது; தங்கள் வீட்டில் நுழைந்தாலே மனம் நிம்மதியாயிருக்கிறது—இதெல்லாம் தான்யலக்ஷ்மி தந்த ஸம்பத்துக்களோ—தனலக்ஷ்மிக்கும் தங்களுக்கும்தான் எழாம் பொருத்தமாயிருக்கிறதே—தங்கள் செழிப்பின் ரகசியமென்ன?

**ராயர்:** நான் பக்கா கிராம வாழ்வு வாழ்வதே என் செழிப்பின் இரகசியம். நான் சாப்பிடும் அன்னமும் பேளாஹாளியும் நான் அணியும் ஆடையும், வசிக்கும் வீடும் சுதந்தரமானவை; சிக்கலற்றவை; நான் யாருக்கும் ஜவாப்தாரியல்லேன்; வரியிலாகாவுக்குத் தவிர. எளிமை, தன்னுதவி—இரண்டுதான் என் வாழ்வின் இரகசியம். இவற்றாலேதான் நான் இன்பமாயிருக்கிறேன்.

**நான்:** ராயர்வாள், எனக்கும் இன்பமாயிருக்க வேண்டுமென்றேயிருக்கிறது. தயவு செய்து தங்கள் இன்ப வாழ்வின் திருக் காட்சிகளை எனக்குக் காட்டியருளவேண்டும். நான் தங்கள் சிஷ்யன்

சிஷ்யஸ் தோஷம் ஸாதி
மாம் த்வாம் ப்ரபன்னம்

* * *

II

ராயர்வாளுக்கு உச்சி குளிர்ந்து போனது. "வாரும் என்னுடன் என்று இழுத்துச் சென்றார்" ஊசிக்குப்பின் செல்லும் பட்டை நூல்போல், அவர் பின் சென்றேன். வீடெல்லாம் சுற்றிக் காட்டினார். பட்டணத்தில் பினைல் மண்ணெண்ணெய், பெட்ரோல், சாக்கடை, குழாயில் கலந்த மருந்து, என்னென்னவோ புகைகள் நாறி மூச்சைக் கெடுக்கும்; என் வீட்டைப் பாருங்கள் மணவிடுதான். தினம் சுத்தமாகமெழுகி கோலம் போடுகிறாள் என் மனைவி; கோலத்தில் என் பெண் அழகான பரங்கிப்பூக்களை வைத்திருக்கிறாள் பாருங்கள்; உள்ளேசெல்வோம்.சாம்பான்

கனை ஒழுங்காக அந்தந்த இடத்தில் அடுக்கி யிருக்கிறோம்; நாங்கள் ஐந்து பேர் இருக்கிறோம்; எங்களுக்கேற்றபடி உக்கிராணத்தில் பானைகளில் அரிசி, பருப்பு, புளி, மிளகாய் இவை வைத்திருக்கிறோம். மேலே களஞ்சியம் ஒரு வருஷத்திற்கு வேண்டிய நெல், துவரை, உளுந்து, புளி, மிளகாய் எல்லாம் அங்கே கட்டிக் குவித்திருக்கிறோம். இதோ பூஜையறை. காலை எழுந்ததும் வெளி வாசலுக்குப் போய்வந்து சிறிதுதோட்ட வேலைசெய்து எதிரே ஓடும் காவேரியில் குளித்துவந்து, ஸஹஸ்ர நாமம் சொல்லி தேவாராதனம் நடக்கும். பிறகு கீதை பாராயணம், ராமஜபம் நடக்கும். பிறகு சமயலறை வேறு—வாருங்கள் இதோ என் மனைவி மக்கள் எல்லாரும் வண்டு போல் வேலை செய்கிறார்கள்.

III

நான் அந்த வீட்டை வியப்புடன் பார்த்து மகிழ்ந்தேன்; அச்சமயம் ராயர் மனைவி (காவேரி பாய்) பலகைபோட்டு இலை விரித்து நாணப் புன்னகையுடன் வரவேற்றாள். எங்கள் சுதந்தரத்தோசையைக் கொஞ்சம் ருசி பாருங்கள் என்று அமர்த்தினார் ராயர். 'சந்தோஷம்' என்று நான் அவர் பக்கத்தில் அமர்ந்தேன்; அவர் பையன் "மாமா பக்கத்தில்தான் உட்காருவேன்" என்று அன்பாக என் அருகே அமர்ந்தான். அவர் பெண் சுத்தமான லோட்டாவில் தீர்த்தம் கொண்டுவந்து வைத்தாள். பிறகு வற்றல் வடாம் பரிமாறினாள். மனைவி தோசையும் பிசிபிசி பேளா ஹுளியும் கொணர்ந்து நான் சிம்ம கர்ஜனை செய்யுமட்டும் பரிமாறினாள். எல்லாம் தேவாமிருதமாயிருந்தன. பட்டணக் கிளப்புகளின் தட்டுகளும் வண்டிகளும், சத்தழிந்த சரக்குகளும் அப்போது எச்சில் சாப்பாடுபோல் எனக்கு அறுவருத்தன. இந்தப் பரிசுத்தமெங்கே காப்பிக்கடையெங்கே!

சாப்பிட்டதும் மகள் வெற்றிலைசீவல் பெட்டியைக் கொண்டுவந்து வைத்தாள். "நான் வெற்றிலைபோடுவதில்லை" என்றேன், ஆனால் நானும் இனிப் போடுவதில்லை என்று ஒரு பாக்குமட்டும் கடித்துக்கொண்டு ராயர் என்னைக் கொல்லைப் புறம் அழைத்துச் சென்றார். அங்கே மூன்று கொட்டடங்கள் இருந்தன. ஒன்றில் அழகான பசுமாடு கட்டியிருந்தது; கன்றுசந்தோஷமாகத்துள்ளி விளையாடியது. மாட்டிற்குப் பசும்புல், வைக்கோல் தினம் சுத்தமாகக் கழுவிய தொட்டியில் கழுநீர் எல்லாம் வைத்திருந்தன. பசுமாட்டிற்கு குளிப்பாட்டி மஞ்சள்பூசி நெற்றியில் குங்குமமிட்டு கொம்பில் பூமுடித்து காவேரிபாய் தினம் கோபூஜை செய்கிறாள். கோவும் காமதேனுபோல் அவள் விரும்பியதெல்லாம் தருகிறது. அருகே ஒரு துளசி மடம். துளசி பூஜையும் வீட்டில் நடக்கும்.

இன்னொரு கொட்டடத்தில் கிராமப் பெண்கள் நெல் குத்தினர், துவரை உடைத்தனர் மற்றொன்றில் நான்கு இராட்டினங்கள் இருந்தன. ராயர் 'கரில்கா, இல்லிபா" என்று கூப்பிட்டார். மகள் கங்கா தம்பியையும் கூட்டிக்கொண்டு ஓடிவந்தாள். "மாமாவுக்கு நூற்றுக்காட்டு" என்றார் தம்பி பஞ்சடித்துத் தந்தான்; கங்கா பாடிக்கொண்டே அழகாக நூற்றாள். "சாப்பாடானதும் நாங்கள் நால்வரும் இந்த ராட்டினங்களில் ஆளுக்கு 100 கஜம் நூற்பது வழக்கம். அந்த நூலே எங்கள் வீட்டுக்குப் புடவை துணி தந்து உப்பு, புளி, மிளகாய்க்கும் கட்டிவரும் என்றார் ராயர்".

பிறகு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அழகானதோட்டம்; தென்னை மா, பலா, வாழை, பரங்கி, புடலை, பீர்க்கை, கத்தரி, முருங்கை, வெண்டை எல்லாம் காய்த்துக் குலுங்குகின்றன ஒருபுறம். அவை குடும்பத்திற்கு மிஞ்சி வரும்படியும் தரும். இன்னொரு பக்கம் ஆமணக்கு செழித்திருக்கிறது; ஆமணக் கைப்பிழிந்து விளக்கெண்ணெய் எடுக்கிறார்கள். மண்ணெண்ணைப் புகையே

அந்த வீட்டில் கிடையாது, மூக்குக் கண்ணாடியும் கிடையாது. தேங்காயை உலர்த்தி செக்கிலாட்டி நயமான தேங்கா யெண்ணெய் ஜாடிகளில் சேர்த்து வைக்கிறார்கள். தென்னைநாறு தாம்புக்கயிறாகிறது. தோட்டத்தில் பூஜைக்கு வேண்டிய புஷ்பச்செடிகள் உள்ளன—மல்லிகை, மந்தாரை, வில்வம், துளசி, விபூதிப்பச்சை, மாசிப்பச்சை, மருக்கொழுந்து, ரோஜா, சம்பங்கி முதலியன—இவற்றைக் கொஞ்சி வரும் காற்று ஆத்மாராமமளிக்கிறது. தோட்டத்தில் ஒரு கொட்டகை. அதில் கைத்தறி போட்டிருக்கிறார்கள். ஒரு சேணியன் தறியோட்டுகிறான். நூல் கண்டுகள் போதுமட்டும் சேர்ந்ததும், **சேணியச் சுப்பனை** அழைத்து ராயர் ஆலைபோட்டுப் பாவுவிரித்துத் தறியில் பூட்டிவிடுவார். சுப்பன் நெய்யவேண்டியது. நெசவு முடியுமட்டும் குடும்பத்துடன் அவனுக்குச் சாப்பாடு, முடிந்ததும் வேட்டிதுணி தந்து மரியாதையாக அனுப்புவார் ராயர். அவனும் திருப்தியாகச் செல்வான். மறுபடி ராயர்வீட்டுச் சாப்பாடு எப்போது கிடைக்குமென்று காத்திருப்பான். இப்படி பத்து வீடுகளில் வேலைசெய்தால் அவன் பிழைப்பிற்குக் கவலை யில்லை.

தோட்டம் பார்த்தபிறகு ராயர் என்னை வயலுக்கு அழைத்துச் சென்றார். ஆ! **தான்யலக்ஷ்மியின்** பூர்ண ஸௌந்தர்யமும் அங்கே மிக தாராளமாக விளங்கியது. காவேரி யம்மனின் செல்லக் குழந்தை அந்தப் பசுவயல். அதில் பட்டுவரும் காற்றே நமது கவலை தீர்க்கும். ராயருக்குப் போதிய பூஸ்திதி யுண்டு. அதில் வரும் நெல் அவர் குடும்பத்துக்கு தாராளமாகப் போதும். விளைவில் பாதி உழைப்பாளிகளுக்குத்தந்து பாதியை அவர் வீட்டிற்குக் கொண்டுவந்து குவிப்பார். மனைவி மக்களை அழைத்து தான்யலக்ஷ்மி பூஜை நடத்துவார். மனைவி தான்யலக்ஷ்மிக்கு மங்கள ஹாரத்தி எடுத்து மலர் தூவுவாள். எல்லாரும் நமஸ்கரித்த பிறகு, நெல் களஞ்சியமேறும்.

ராயர் வீட்டுக்கு எதிர் வீட்டார் துவரை விளைவிக்கின்றனர். ராயர் நெல்லைத்தந்து அளவுக்கேற்ற துவரை வாங்கிக்கொள்வார். இன்னொருவீட்டில் புளிவரும், நெல்லைத்தந்து ராயர் புளி வாங்கிக்கொள்வார் இப்படியே வருஷாந்தரச் சாமான்களையும் பண்டங் கொடுத்தே ராயர் சேர்த்துவைப்பார்.

## IV

அவர் பணந்தொடாமல் இவ்வளவு சந்தோஷமாக வாழ்வதைக்கண்டு மகிழ்ந்தேன். எனினும் ஒரு கேள்வி கேட்டேன். "ராயர்வாள், வெளியூர்களுக்குப் போகவேண்டி யிருந்தால் பணம் வேண்டியிருக்குமே—என்று தொடங்கினேன்.

**ராயர்:** தாங்கள் சொல்வது தெரிந்தது. சாதாரணமாக நம்மவர் கோர்ட்டு வழக்குகளுக்கும், பள்ளிப்படிப்புக்குமே வெளியூர் சென்று பணத்தை அள்ளிக் கொட்டுகிறார்கள். நான் இந்த இரண்டையும் கனவிலும் நினைப்பதில்லை. நான் யார் வம்பிற்கும் போவதில்லை. என் வீட்டு நடைமுறையை நான் கவனித்துக்கொள்ளுகிறேன். எதிர்வீட்டு வம்பிற்கு நான் செல்வதில்லை. இதுவரையில் நான் கச்சேரி வாசலை மிதித்ததில்லை, வக்கீல்களைக் கெஞ்சியதில்லை. எங்கள் தெருவில் ஐந்து நல்ல குணவான்கள் இருக்கிறார்கள்; ஏதாயினும் மனஸ்தாபம் வந்தால் அவர்களிடம் சொல்லுவோம். அவர் சமாதானம் செய்து எங்களை மீண்டும் நண்பராக்கிவிடுவார். தெருக் கோடியில் கோவிந்தய்யர் பள்ளிக்கூடம் இருக்கிறது, அதில் நான்கு உபாத்தியாயர்களுண்டு; அவர்களே ஊர் பிள்ளைகளுக்கு எண்ணெழுத்து கற்பிக்கிறார்கள். எங்கள் ஊர் பிள்ளைகள் அனைவரும் தமிழ் எழுத்துப் புஸ்தகம் வாசிப்பார்கள். கடைக்கணக்கு மனக்கணக்கு மளமளவென்று போடுவார்கள். அதோபாருங்கள்! குழந்தைகள் பலீன் சடுகுடு விளையாடுகின்றனர். பட்டணத்தில் மட்டையடிக்கும்

பிள்ளைகளுக்கும் இங்கே பறவைபோல் ஓடியாடும் குழந்தைகளுக்கும் வித்தியாசம் பாருங்கள். பார்த்தேன் குழந்தைகள் முருகனும் கண்ணனும்போல் அழகாயிருந்தனர். முத்து முத்தாகப் பேசினர்.

"எல்லாம் சரிதான் ஸ்தல யாத்திரை கூடப் போகமாட்டீரா? போகும்போது என்னசெய்வீர்!

**ராயர்:** நானு? நான் ஒருதரம் கால் வண்டியைத் தட்டிவிட்டுக் காசியாத்திரை செய்தேன். ஒருதரம் இராமேச்வர யாத்திரை செய்தேன் அப்போது ஸ்டேஷன்மாஸ்டருக்கு நெல்விற்றேன் அவர் நெல் விலையைச் செலுத்தி எனக்கொரு ரிடேண் டிக்கெட் தந்தார். நான் அரிசி பருப்பு சாமான்களெல்லாம் கட்டிக்கொண்டு அங்கே சத்திரத்தில் இறங்கினேன். எனக்கு சங்கல்பம் சொன்ன பிராமணனுக்கு அரிசியாகவே தட்சிணைதந்தேன். சத்திரத்தில் பாத்திரம் வாங்கி பத்து சாதுக்களுக்கு நாங்களே சமைத்துப்போட்டோம். காரியம் முடிந்ததும் ஊர்வந்து சேர்ந்தோம்— இந்தமாதிரி என் வாழ்க்கை நடக்கிறது. நெல்லும் நானுமே என் பணம்."

V

**ராயர்:** தன் கதையை முடித்தாரோ இல்லையோ வாசலில் 'ஜல் ஜல்' என்றொரு குதிரைவண்டி வந்து நின்றது. அதிலிருந்து தம்பதிசகிதம் ஒரு கனவான் இறங்கி வந்தார்,—சட்டை தொப்பி தடபுடலாயிருந்தன. ராயர் "வா குண்டு" என்று வரவேற்றார்.

**குண்டுராவ்.** நமது ராயர் தம்பி. அவர் சென்னையில் ஹைகோர்ட்டு வக்கீல். சுமாரான வரும்படியுள்ளவர்; சுகவாசி; காலத்திற்கேற்ற கனவான். அவருக்கு அண்ணாவின் பட்டிக்காட்டுத்தனம் பிடிக்காமல் பாகம் பிரித்துச் சென்றார். சென்ற இருபதாண்டுகளாக ஊர்பக்கமே வருவதில்லை. அண்ணா, "கிராமவாசமே நல்லது. ஓய்வு நாளில் இங்கே வந்திடு" என்று மரியாதையாக எழுதுவதுண்டு. "டாம்! உன் கிராமத்தில் என்னவுண்டு? ஒரு மோட்டார், டிராம், டாக்கி, பார்க், கிளப், கார்னிவால், மியூஸியம்— ஒருமண்ணுமில்லை. காவேரி ஸ்நானமும் மடிசஞ்சி ஆசாரமுந்தான் உன் கிராம மகிமை. நாகரிக மனிதன் கிராமத்தில் அடைபடுகிறனு? அதினும் உன் கொடுமை பொறுக்கமுடியாது. இந்த நாகரிக நூற்றாண்டில், யந்திரங்கள் அருவிபோல் ஆடைகளை நூற்று நெய்து தள்ளும் இக்காலத்தில், முப்பதாம் பசலி கைராட்டினத்தில் நூற்றுடுத்துவதாம். காந்திக்கு அண்ணனுயிருக்கிறாய். மோட்டார் கலப்பைகள் நிலத்தை விரைவாக உழுகின்றன; இந்த நாளில் மரக்கலப்பையில் உழுவதாம்; பணமில்லாமல் பண்டமாற்றுச் செய்வதாம், ஹரிபக்தியாம், கீதையாம், சனுதனதருமமாம், நான் ஜெ‌ஸன்ஸ்; எனது நூதன தருமத்தை வந்துபார். வேண்டுமானால் வழிச் செலவுக்குப் பணம் அனுப்புகிறேன்" என்று குண்டு ராவ் அண்ணன்மேல் சென்னையிலிருந்தே காகித குண்டு வீசிக்கொண்டிருந்தார். இன்று அதே தம்பி பட்டிக்காட்டிற்கு வந்தது மன்னியில்— "அண்ணா நமஸ்காரம், என் பிழைகளை மன்னிக்கவேண்டும்" என்றது ராயருக்கு ஆச்சரியமாயிருந்தது.

**ராயர்:** "குண்டு, நீ வந்ததுபற்றி எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி; முதலில் நீயும் உன் சம்ஸாரமும் காவேரியில் ஸ்நானம் செய்துவந்து சாப்பிடுங்கள்—என்றார்."

**குண்டு:** அண்ணா எங்களுக்குப் பச்சைத் தண்ணீர் ஒத்துக்கொள்ளாது. வெந்நீர் வேண்டும் என்றார். ஆஹா இதோ என்று அண்ணன் உள்ளே தகவல் அனுப்பினர். வெந்நீர் தயாராய் விட்டது. குளித்ததும் நளபாகமான சாப்பாட்டைவிட்டு காபி கேட்டார். தம்பி உனக்குப் பட்டணம் காப்பி கிடைக்காது. பட்டிக்காட்டுக் காப்பி

தருகிறேன் என்று அண்ணன் சமயலறைக்குச் சென்று கொத்தமல்லியும் வேப்பம்பூவும், சுக்கும், போட்டுக் கஷாயம் வைத்துப் பால்விட்டுத் தென்னை வெல்லம் போட்டுக் கொண்டு வந்து தந்தார். தம்பி குடித்து "அடடா மிகவும் நன்றாயிருக்கிறதே இதென்ன கொக்கோவா பொன்கோவா! என்றான்—தம்பி இது கொத்தமல்லிக் கஷாயம்; சர்வபித்த சம்ஹாரி" என்றார்.

## VI

சிரமபரிகாரம் ஆனதும் இருவரும் பேச உட்கார்ந்தனர்.

**அண்ணன்.** குண்டு, சென்னையில் உன் வக்கீல் தொழில் எப்படி நடக்கிறது? நல்ல வரும்படி கிடைத்து, பாங்கில் எவ்வளவோ சேர்த்திருப்பாய்; உன் சம்சாரம் என் இளைத்துப் போனாள்! உன் குழந்தை ரங்கன் எங்கே! பட்டணத்தில் வீடு வாசல் வாங்கியிருக்கிறாயா! நான் பட்டிக் காட்டுப் பேர்வழியாதலால் வெளிப் படையாக யோக க்ஷேமங்களை விசாரிக்கிறேன்; நான் கேட்பது நாகரீகமில்லையானால் என்னை மன்னித்துவிடு....

**குண்டு:** அண்ணா, நான் பட்டணத்தில் வாழ்ந்த கதை மகாபரிதாபம். வக்கீல் தொழிலில் இக்காலம் அதிகம் எதிர்பார்க்க முடியாது. காப்பிக்கடையைவிட வக்கீல்கடை வலுத்தது. என் பங்கைப் பிரித்துக்கொண்டு பதினாயிரம் ரூபாய் எடுத்துச்சென்று பாங்கியில் போட்டேன்; அதன் வட்டியில் சில காலம் தள்ளிவந்தேன். நாளடைவில் மாதம் இருநூறு ரூபாய் வந்தது; டம்பச் செலவில் தலைவைத்தேன். மைலாப்பூரில் பெரிய வீடு அமர்த்தினேன்—வாடகை ரூ. 50, பாங்கு பணத்தை எடுத்து மோட்டார் வாங்கினேன். அதற்கு மாதச்செலவு அறுபது ரூபாய்; மோட்டார் வாங்கினபிறகு சும்மா இருக்கலாமா! நாகரீக கிளப்புகளுக்கு அவளையும் அழைத்துச் சென்றேன்; அங்கே சந்தாச்செலவுகள் வேறே; நாகரீகமான இடங்களுக்கு வேஷ்டி தலைப்பாகை வைத்துச்செல்வது கேவலம் எனப்பட்டது. உடனே ஹாட் பூட்ஸ் போட்டு என்னை அசல் துரை என்று நினைத்துக் கொண்டேன்; அசல் துரை தமிழில் பேசலாமா! நான் ஆங்கிலமே பேசினேன்; என் மனைவிக்கும் டியூஷன் வைத்து ஆங்கிலம் கற்றுக்கொடுத்தேன்; அவள் என்னைவிட நாகரீகத்தில் ஒருபடி முன்னே சென்றாள். வெள்ளைக்காரி மாதிரி பாவாடை அணிந்தாள்; முகச் சாயம் பூசினாள்; போலிப்பல் வைத்துக் கொண்டாள்; என்னை உங்களைத்தானே என்றழைப்பதைவிட்டு 'மிஸ்டர் குண்டு' என்றழைத்தாள். எனது நண்பருடன் உல்லாசமாகப் பேசினாள். அவளுக்கான பெட்ரோல் செலவும் வைத்தியச்செலவும் கணக்கில்லை. சாயங்காலமானால் இருவரும் டாக்கி பார்க்கப் புறப்படுவோம். ஒன்பதுமணி வரையில் கார்னிவால் டாக்கி, கிளப் என்று சுற்றிவிட்டு வீட்டிற்கு வருவோம். நாங்கள் முதலில் சமைத்து சாப்பிட்டோம்; பிறகு சமயற்காரனை வைத்தோம்; அவன் அநாகரீகம் எங்களுக்குப் பிடிக்காமல் லஞ்ச்ஹோமிலிருந்து சாப்பாடு வரவழைத்தோம். முதலில் அதற்கொரு பிராமணனை வைத்தோம்; பிறகு ஜாதி வேற்றுமையை விட்டுவிட்டு எங்கள் மோட்டார் ஓட்டியையே சாப்பாடு வாங்கிவரச் செய்தோம். இந்த ஏற்பாடும் பிடிக்கவில்லை; நாகரீக கனவான்களுடன் சாப்பிட்டு எங்களுக்கு ஜாம்—பிஸ்கட்—சாக்லெட்—கேக் என்று டப்பா சாமான்களில் மோகம் விழுந்தது; உடனே போஜோடோ ஹோட்டலிற் புகுந்தோம்; மின்சார விசிறியின் கீழ் சலவை மேஜையில் ஜோராக உண்டு மதிப்பாக பில்வாங்கி பணங்கொடுத்துவந்தோம்; எல்லாம் மதிப்புத்தான்; ஆனால் எங்கள் வாழ்வில் ஒரு கோதிப்பு ஏற்பட்டது.

* * *

கண்டதை உண்டதால் உடல் நோயுண்டது; ஜீரணக்கருவிகள் தளர்ந்தன; சிசா மருந்துகளுக்குப் பணங்கொட்டினேனும்; நோய் தீரவில்லை; இதனிடையே ஒரு ஆண்குழந்தை பிறந்தது; அதற்கு

அவளால் பால்கூடத் தர முடியவில்லை. நர்ஸ் வைத்தோம். அது எலும்புந்தோலுமாக ஐந்தாண்டிருந்து ஏராளமான வைத்தியச் செலவை வைத்துவிட்டு சென்ற ஆண்டு தான் உயிரைவிட்டது. என் வரும்படியும் செலவிற்கு கட்டி வரவில்லை; பாங்கியில் கடன் வாங்கினேன்; சென்னையில் கடற்கரை சென்றாலே நல்ல காற்று; நகரத்தில் தூசியைத்தான் சுவாசிக்கிறோம்; வெயில்காலத்தில் நீராரம் மழைகாலத்தில் ஒரே நாற்றம்; சந்து பொந்துகள் மகா ஆபாசம். காவேரித் தண்ணீர் சாப்பிட்ட எனக்கு அந்தக் குழாய் தண்ணீர் ஒத்துக்கொள்ளவில்லை; சோடாவே குடித்துக் காலந்தள்ளினேன். என் உடம்பைப் பார்த்த ஒரு நண்பர், மிஸ்டர் குண்டுராவ், சித்திரை மாதம் லீவில் பேசாமல் கோயிலடிக்குப் போய் ஹாய்யா யிருங்கள். கிராம வாசமே உடம்புக்கு நல்லது என்றார். "அட சை, சினிமாவும், பார்க்கும் விட்டு அந்த பட்டிக்காட்டிற்குப்போய் அந்த காட்டுமிராண்டியுடன் இருக்கவா—முடியாது" என்று ராங்கியாகப்பேசினான்.

* * *

காகிநாடாவில் குண்டு விழுந்தது; சென்னை காலியானது. முன்னே கெஞ்சினாலும் கிராமத்திற்கு போகாதவர்கள் இப்போது எங்கே எங்கே என்று கிராமவாசத்தைத் தேடிச்செல்கிறார்கள். சென்னை என்னையும் கல்தாக்கொடுத்துத் தள்ளியது. எனக்கும் புத்திவந்தது. என் பாத்திரம் பண்டம் புத்தகம் எல்லாம் எலப்போட்டுக் கடன் அடைத்துவிட்டு மனைவியுடன் உன்னை வந்தடைந்தேன். இனி உன் வழியில் வாழப்போகிறோம். இதுவரையில் தனலக்ஷ்மியை நம்பி இப்படிப்போனேன், இனிநான் தான்ய லக்ஷ்மியை நம்பியே வாழுவேன்; ஸ்ரீ கடிதத்தில் எழுதிய உபதேசத்தை இங்கே வந்துதான் உணர்ந்தேன்.

**மாதவ ராவ்:** "தம்பி உன்க்கு இந்த மட்டும் மனம் திரும்பியது பகவான் செயலே; இரு என்னுடன்; முதலில் உன் சட்டை தொப்பிகளைக் கழற்றி எறி நமது நாட்டிற்கு இவை அனாவசியம். இதோ கைத்தறியில் நெய்த ஆடை உடுத்து, உன்சம்சாரத்திற்கும் இதோ புடவை தருகிறேன். தம்பி, சுகிருசியாக எளிய உணவு; நல்ல காவேரி ஜலம், தோட்டந்துறவுகளில் காற்றும் வெயிலும்பட உழைப்பு; பரம சுகத்தைக் கொடுக்கும் தேவாராதனம் பாராயணம், பஜனை, பிரறைச்சாராமல் நமது முயற்சியால் வந்த அன்ன வஸ்திரம் கோர்ட்டு வம்பு வழக்கு, பட்டணம் புகைதூசியில்லாத நிம்மதி தேகசுகம், மனச்சாந்தி ஆத்மசுகம் இவையே கிராமவாசம்" என்றார் மாதவராவ்.

இப்படி வாழக் கொடுத்து வைக்க வேண்டுமே; நகரம் நரகந்தான்; கிராமம் ஆத்மாராமந்தான் அண்ணா உடனே தோட்டவேலை ஆரம்பிக்கிறேன் கொடு மண்வெட்டியை குண்டுராவ் சாமி வந்தவன் போல் எழுந்தான். ஆறு மாதம் கழித்துக் கோயிலடிக்கு வந்தேன். குண்டுராவ் தளதளவென்று குண்டாக வளர்ந்துவிட்டார். நோய் ஓடிப்போனது அவர் வாய் கீதை சொல்லுகிறது. கை தோட்டத்தில் உழைக்கிறது மாதவராவுக்குச் சந்தோஷம் பொறுக்கமுடியவில்லை. "என் தம்பி எனக்கு முன்னே நிற்கிறான்; தோட்டவேலை பார்க்கிறான்; கலப்பை கூடப் பிடிக்கிறான்; அவனே இப்போது தேவாராதனம் செய்கிறான். எங்கள் வாழ்க்கையெல்லாம் தேவாராதனந்தான் நாங்கள் செய்வதெல்லாம் தெய்வ நிவேதனந்தான்" எல்லாம் தான்யலக்ஷ்மியின் வரப்பிரசாதமே! என்று சொல்லி பூரித்தார்.

# அதிகார வர்க்கக் கோட்டையையே முற்றுகை

ரா. சந்திரசூடன், பி. எஸ். ஸி. புதுடில்லி.

**வி**யப்போ, ஆச்சரியமோ அல்லது சந்தோஷமோ கொள்ளாதீர்கள் தலைப்பைக்கண்டு. மனக்கிலேசம்தான் ஏற்படும் இதை வாசித்தால். தெற்கே நம் நிலத்தில் இருக்கும் கஷ்டநிஷ்டூரங்களைப்பற்றி அங்கிருந்து இங்கு வரும் பலரிடம் நான் கேட்டு மனம் நொந்திருக்கிறேன். துக்கமும் சில சமயங்களில் உப்பின்றி சப்பென்றிருக்கும் சாப்பாட்டிற்கு 'கோங்குரா' சட்னியைப் போல் சுவை கொடுக்கிறதல்லவா. அதனால் துக்ககரமாக இருக்கிறதே என்பதற்காக இவ் விசாரணை நான் செய்யாமலிருப்பதில்லை. இங்கு அதிகார வர்க்கத்தின் கோட்டையிலே சில பண்டங்களின் விலை வாசிகளை உங்களுக்கு அறிமுகம் செய்யத் துணிந்திருக்கிறேன்.

பஞ்சம் என்பது இந் நாட்களில் சகஜமான வழக்குச் சொல்லாகி விட்டது. பஞ்சம் என்ற வார்த்தை நான் புத்தக மூலமாகப் பழங்காலக் கதைகளில் நம் நாட்டில் இருந்ததென்று வாசித்திருக்கிறேன். போன மகாயுத்தத்தின் பொழுதும் நமது தேசத்தில் இவ்வளவு இல்லாப்பிணி இருந்ததாகத் தெரியவில்லை.

சில மாதங்களாக டெல்லியைச்சுற்றி எங்கு பார்த்தாலும் வர்த்தக மதில்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. பஞ்சாப் அரிசியும், கோதுமையும் தன் பிராந்தியத்தை விட்டு வெளியில் போகக் கூடாதென்று அங்கு உத்திரவு. கிழக்கே ஐக்கிய மாகாணத்திலிருந்து அங்கு உற்பத்தியாகும் அரிசியோ, சர்க்கரையோ வெளி மாகாணங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாதென்றும் தெரிகிறது. சுற்றியிருக்கும் இந்திய சமஸ்தானங்களிலும் தங்கள் தங்கள் விளைபொருள்களையும், உற்பத்திப் பொருள்களையும் பத்திரப்படுத்திக் கொள்ளுகின்றனர். டெல்லி மாகாணத்தைச் சுற்றிப் பொட்டைத் திடல்கள் தான் கண்ணுக்குப் புலப்படுகின்றன. யமுனைப் படுகையில் இங்குமங்கும் பல புலன்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் 'செந்நெல் கொழிக்கும்' காட்சி நான் கண்டதில்லை. நாங்கள் தார்பாலைவனத்தின் கண் பார்வையில் தானே வளர்ந்து வருகின்றோம். உணவுப் பொருள்களும், மற்றைய அத்யாவசிய சாமான்களும் வெளியிலிருந்துதான் வந்தாகவேண்டும். ரயிலதிகாரிகளோ துருப்புகளை இங்குமங்கும் மாற்றவும், சைனியங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், மற்றத் தேவையான சாமான்களும், யுத்த சாமான்களும் கொண்டுகொடுக்கவும், சர்க்கார் சிப்பந்திகள் பிரயாணம் செய்வதற்கும், இன்னும் பொது மக்களின் அவசிய நடமாட்டத்திற்கும் தான் ஏற்பாடு செய்யத் திக்குமுக்காடுகின்றனரே. பீஹாரிலிருந்து கரியும், பஞ்சாபிலிருந்து கோதுமையும், மீரட், டேராடூன் முதலிய இடங்களிலிருந்து அரிசியும், தெற்கேயிருந்து புளி, மிளகாய், பருப்பு வகையறாக்களும், வெளிதேசங்களிலிருந்து இந்தியத்துறைமுகங்கள் வழியாக வருவிக்கப்படும் அத்யாவசியமான சாமான்களும் கொண்டு வருவதென்றால் எவ்வளவு அசாத்தியமான காரியம்.

இவ்வளவு சிரமத்தில் வர்த்தகர்களும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" கிறார்கள். சாமான்களை நியாயமான விலைக்கு விற்க இஷ்டப்படுவதில்லை. அவர்களது மதிப்பு என்னவென்றால்

போன வருஷ விலையைப்போல் மூன்று, நான்கு பங்கு விலையில் விற்கவேண்டுமென்பது. சந்தையில் எதேனும் ஒரு சாமான் சேமிப்பு சிறிது குறைந்தால் உடனே அதன் விலை விஷம்போல் ஏற ஆரம்பித்துவிடுகிறது. போன மாதம் ஒரு நாள் தினசரியில் இனி அமெரிக்காவில் க்ஷவரக்கத்தி உற்பத்தி செய்யப் பட்டப் போவதில்லை என்ற செய்தி வாசித்தோம். ஆங்கிலம் வாசித்தவரல்லவாகூட தெற்கேயிருந்து பிரமாதமான மூளையைக் கொணர்ந்திருக்கிறோம் என்ற எண்ணம். இவ்வூர் கடைக்காரர்களுக்கு ஏது அவ்வளவு சமர்த்து என்ற மமதை வேறு. அன்று மாலை கடைப்பக்கம் போய் க்ஷவரப்பிளேடு (Blade) உத்தேசமாக ஒரு வருஷத்திற்கு வாங்கிப் பத்திரப்படுத்தலாம் என்ற தீர்மானம். ஆலிவர் லிட்டில்டன் (Mr. Oliver Lyttleton) என்ற பிரிட்டிஷ் மந்திரிகளுள் ஒருவர் அமெரிக்கா சென்று இன்னும் 6-மாதங்களுக்குள் நேச நாடுகள் ஜயம் பெறுவது திண்ணம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும், அமெரிக்கா ஜனாதிபதி ரூஸ்வெல்டும் சொல்வதாவது "இப்பொழுது தான் ஜயம் என்ற வானம் வெளிர்கிறது. இன்னும் தைரியமாகவும், விடாமுயற்சியுடனும் வெகு தூரம் நடந்தால் தான் ஜய வாயில் அடையலாம். ஆனால் நமது முடிவு ஜயம் என்பதில் ஐயமில்லை. இவ் வருஷத்திற்குள் ஜயம் பெறச் சாதகமான ஆயுதங்களைத் தயார் செய்துகொண்டு விடுவோம்". எந்தக் கால அளவை எடுத்துக்கொண்டு நாங்கள் ப்ளேடு வாங்கிச் சேமித்து வைப்பது என்ற பிரச்னை எழுந்தது. ஆனால் எங்களிடமிருந்த மணிப் பர்ஸுக்கு அவ்வளவு மனமாறாட்டம் ஏற்படவில்லை. முதல் நாள் 1¼ரூபாய்க்கு விற்ற ஒருபாக்கெட் பிளேடை ஒரு கடையில் விலை கேட்டோம். கடைக்காரர் 4-ரூபாய் என்றார். ஆனால் 6 பாக்கெட் வாங்கினால் 3¾-ரூபாய் விதம் தருவதாகச் சொன்னார். கோபத்துடன் இன்னொரு கடையில் விசாரித்தோம். அவர் 4¾-ரூபாய் என்றார். கூட புத்திமதியும் சிறிது அள்ளி யெறிந்தார் எங்களுக்கு. "இவை புதிய பிளேடு. இன்று இந்த விலையில் வாங்காவிடில் நாளைக்கு மிகவும் வருத்தப்படுவீர்கள். அனேகமாக 7-ரூபாயில் போய் நிற்கும்," என்றார். மறுநாள் வருத்தந்தான் பட்டோம். ஏனெனில் காலையில் 6½-ரூபாய் என்று விற்ற அதே பாக்கெட் மாலையில் ரூ. 7-10-0 ஆயிற்று. இம்மாதிரி சந்தை விலைகள் பல இந்நாட்களில் "எவரெஸ்ட்" ஏறி இறங்குகின்றன.

திடீர் திடீரென்று சர்க்கரை கடைகளில் கிடைக்காமல் போய்விடுகின்றது. அன்று ஒரு சினேகிதர் "காப்பி எங்கள் வீட்டில் குடிப்பது நின்று பல நாட்களாகி விட்டன," என்று ஏக்கத்துடன் சொன்னார். "ஏன், காப்பிப் பொடி இப்பொழுது இங்கே கிடைக்கிறதே பவுண்டு ரூ. 1-10-0-க்கு," என்றேன். "அது கிடைக்கிறது வாஸ்தவம்தான். அதற்குக்கூட 1-மாதம் முன்பு பஞ்சம் வந்திருந்தது. இப்பொழுது கடையில் சர்க்கரை கொடுக்கமாட்டேன் என்கிறான்," என்றார் அவர். டெல்லி மாகாணத்தைத் தாண்டி இடறி விழுந்தால் கரும்பங் கொல்லையில்தான் விழுந்து சாகவேண்டும்.

இங்கு இன்றைய விசாரம் கரி. பாழாய்ப்போன அந்தக் கரியின்றி டெல்லியில் ஒரு அடுப்பும் எரியாது. விறகுகொண்டு அடுப்பு எரிப்பது நம் பிராந்தியத்தின் வழக்கம். நிலக்கரியும், சுள்ளிக்கரியும்தான் இங்கு உபயோகம். சுள்ளிக்கரியின்றி நிலக்கரி பற்றாது.

"மூன்றாம் வருஷம் நிலக்கரி மணு 10 அணாவும் மரக்கரி ரூ. 1—8—0-ம் விற்றன. இப்பொழுது கரிக்கடையில் நம் கண்ணிற்கு முன் கரியின் மீது நீரைக் கொட்டி மண்ணை நிரப்பத் தூவுகின்றான், எடையில் சௌகரியம் ஏற்பட. அதற்குட்பட்டுத்தான் நாம் கரி வாங்கமுடியும். அப்படியும் கரி

எல்லாருக்கும் கிடைப்பதில்லை. வாலாயமாக வாங்கிக்கொண்டிருந்தவர்களுக்குத்தான் கடைக்காரன் கொடுக்கிறான். அப்பொழுதும் விலை நிலக்கரி ரூ. 4-ம், சுள்ளிக்கரி ரூ. 3—4—0-ம். ஆனால் இப்பொழுது டெல்லியிலிருக்கும் கரி இன்னும் சில நாட்களில் செலவாகி விடும். பிறகு ?

புளி, பருப்பு, நல்லெண்ணை, மிளகாய் முதலிய சாமான்கள் தென்னாட்டிலிருந்து வந்துகொண்டிருந்தன. இப்பொழுது அவைகளும் போக்கு வரத்து சாதகமின்றித் தாராளமாக வர முடியாமல் பன்மடங்காக விலையில் ஊதியிருக்கின்றன.

துணி விலையைப்பற்றிக் கேட்காதீர்கள். அதைப்பற்றி எழுதுவதென்றால் பேப்பர் கிடைப்பதில்லையே என்ற வருத்தம் என்னைக் கவிழ்ந்து கொள்கிறது. கதர்க்கடைகளில் நிற்க இடமில்லை. கதர்க்கடைகளும் ஒவ்வொன்றாகத் தன்னிஷ்டத்திலோ அதிகார வர்க்கத்தின் இஷ்டத்திலோ மூடப்பட்டு வருகின்றன. கதர்த் தொழிற்சாலைகளுக்கும் இதேவித அதிருஷ்டம் தான்.


என் நண்பர் சாப்பாடு அகப்படாவிட்டாலும் பாதகமில்லை, வெற்றிலை சரியாக அகப்படுவதில்லையே என்று முணுகிறார். பக்கத்தில் இன்னொருவர் "என்ன, ஸார், வெற்றிலை அகப்படாவிட்டாலும் ஒரு வகையாகத் தள்ளலாம். எனக்கு ஒன்றாங்கிளாஸ் யாழ்ப்பாணப் புகையிலை வந்து கொண்டிருந்தது. அது நின்று போய்விட்டதே, ஸார்," என்று ஒப்பாரிவைக்கிறார்.

மண்ணெண்ணெயைப் பற்றி இங்கு அவ்வளவு அக்கரையில்லை இந்தத் தேதி வரைக்கும். எங்கு பார்த்தாலும் மின்சாரம். ஆனால் பளு தாங்காமல் மின்சார விளக்கும் அழுதுகொண்டுதான் எரிகிறது. எங்கு கண்டாலும் "அவசியமில்லாவிடில் உபயோகிக்காதே" என்று ஸ்விச்சில் ஒரு காகித அட்டை தொங்குகிறது.

சில்லரையோ குதிரைக் கொம்பாகி விட்டது. ரயிலில் முக்கால் ரூபாய் டிக்கட் வாங்குவதென்றால் ஒரு ரூபாய் வள்ளிசாக அழுதுவிட்டுத் திரும்ப வேண்டும். அந்தக் கால் ரூபாய் யாருக்குப் போகிறதென்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தப்பல்லவிக்கு முடிவு கிடையாது. பத்திராசிரியர் எங்கிருந்து இவ்விதழுக்குப்பேப்பர் சம்பாதிப்பார் என்ற சந்தேகம்தான் எனக்குப் பெரிதாக எழுகிறது.

முற்றுகைப் போடப்பட்ட ஒரு கோட்டை போலிருக்கிறது இந்நகரம். ஆனால் தனமிருந்தால் ஒருவாறாகக் காலந்தள்ளலாம் என்ற தைரியம் தனம் படைத்தோருக்கு இருக்கிறது. ஏழைகள் பாடு என்ன? பொருள் வலியும், உடல் வலிமையும் இல்லாதவர்களன்றோ அவர்கள்.



# ராகவனின் விவாஹம்

ஜயலக்ஷ்மி R. ஸ்ரீனிவாசன்

நண்பன் ஒருவனின் இல்லத்திற்குச் சென்று அப்பொழுது தான் ரூமிற்கு திரும்பிவந்த ராகவனின் கையில் தபால் காரன் ஒருகடுதாசியை கொடுத்து சென்றான். ரூமின்கதவைத்திறந்து உள்ளே சென்று கடிதத்தை பிரித்துவாசித்தான்.

"என் அன்புள்ள சி. ராகவனுக்கு அநேக ஆசீர்வாதங்கள். இப்பவும் இந்த தீபாவளிக்காவது நான்கு நாட்கள் லீவ் வாங்கிக்கொண்டு கிராமத்திற்கு வந்துவிட்டு போ. குழந்தை ஒட்டல் சாப்பாட்டை சாப்பிட்டு சாப்பிட்டு துரும்பாய் போயிருப்பான். நானு நாளாவது லீவ்வாங்கிக்கொண்டு வரச்சொல்லி எழுதிப்போடுங்கள். அவனுக்கு என் கையார சமைத்து பரிமாரணும்னு ஆசையாயிருக்கு...." என்றெல்லாம் உன் தாயார் என்னை நச்சரிக்கிறாள். உடனே லீவிற்கு எழுதிப் போட்டுவிடு.

இப்படிக்கு,
அநேக ஆசீர்வாதங்கள்
அப்பா. ராமசுவாமி.

என்றிருந்தது. ராகவன் கடிதத்தை வெறுப்புடன் மேஜை மேல் போட்டுவிட்டு சரி, இந்த அப்பா அம்மாவிற்கு வேறு வேலை என்ன! தீபாவளிக்கு லீவ் எடுத்துக் கொண்டு வரவேண்டுமாம். தலை தீபாவளியா? கொள்ளைபோகிறது! முழங்க முழங்க லீவ் எடுத்துக்கொண்டு போனால் ஒரு பட்டிக்காட்டு பெண்ணை பார்த்து வெச்சுண்டு, கலியாணம் செஞ்சுக்கோ என்று நச்சரிப்பார்கள். என்று முணுமுணுத்தான்.

* * *

ராகவனுக்கு லீவும் கிடைத்தது. தீபாவளிக்கு நான்கு நாட்கள் முன்னதாகவே அவன் தாயார் தகப்பனுர் விருப்பப்படி கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். ஒன்றரை வருஷத்திற்கு பிறகு புத்திரனைப்பார்த்து அவன் கிழ தாய் தந்தையர்கள் இருவரும் அகமகிழ்ந்தனர். தாயார் அருமை புதல்வனுக்கு தடபுடலாக பொடுத்தாள், கூட்டு, பச்சடி, வடகம் அப்பளம் என்று பத்து விதம் சமைத்து பரிவுடன் பறிமாறினுள்.

மாலை பொழுது தாயார் கொடுத்த பலகார தினுசுகளை ருசி பார்த்துவிட்டு, காப்பியையும் அருந்திவிட்டு சற்றுநேரம் உலாவி வரலாம் என்று புறப்பட்டான் ராகவன். அச்சமயம் அவன் தாயார் கோமளாம்பாள் "ஏண்டா, அப்பனே! கலியாணகாலம் வந்தாடுத்தே, இன்னும் எத்தனை நாட்கள் பிள்ளையாராட்டமா இப்படி பிரும்மசாரியா நிக்கப்போறே! நம்ம நாணுவின் மைத்துனியின் பெண் மூக்கும் முழியுமா கடைசல்எடுத்த தந்த பதுமைப்போல் இருக்காள்; வர வைகாசிக்கு பதினைந்து நிறையரதாம். நன்னு பாடராள். கொஞ்சம் படிச்சும் இருக்காளாம், ஊர்பட்ட காரியம் செய்ய தெரியறது......." என்று அடுக்கிக் கொண்டுபோனுள்.

ராகவன் முகத்தை சுளித்துக்கொண்டு "இருக்கட்டும் அம்மா, அப்புரம் பார்ப்போம்" என்று வெளியே கிளம்பி விட்டான்.

அந்த ஊர் மிக குளிர்ச்சியான ஊர். பட்டிணவாசத்தின் புழுக்கத்தில் புழுங்கினவர்களுக்கு, தோப்பும் துரவும் கொண்ட அந்த கிராமத்தில் உலாவிவருவதென்றல் பேரானந்தமாக விருக்கும். அநேக கனவான்களும், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் சுகவாசஸ்தானத்திற்காகவும், ஓய்வு எடுத்துக்கொள்வதற்காகவும் அந்த கிராமத்தில் வந்து முகாம் போடுவதும் உண்டு.

ராகவன் சற்று நேரம் உலாவிவிட்டு ஆற்றங்கரையோரமாக மணல் மோட்டின் மீது ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தவண்ணம் சுகமாக வீசும் தென்றல் காற்றை வாங்கிக்கொண்டு இயற்கை அன்னையின் வனப்பை பருகிக் கொண்டு இருந்தான்.

அச்சமயம் வெங்கலமணி அடிப்பது போன்ற கலகல வென்று சிரிப்பு த்வனி கேட்கப்படவே, அவன் திரும்பி பார்ப்பதற்குள்ளாக, அவ்வழியாக சமீபத்தில் ஓய்விற்காக எண்ணி சென்னையிலிருந்து அந்த கிருமத்திற்கு வந்திருக்கும் ரிடையர்ட் டிப்டி கலெக்டர் கிருஷ்ணய்யங்காரும், அவருடன் கூட ஓர் இளம் பெண்ணும் வந்தனர். அவர்கள் நகர வாசிகள் ஆதலால் மாலைப் பொழுது உலாவ சென்றுக் கொண்டிருந்தார்கள் போலும். அந்த பெண்ணிற்கு சுமார் பதினேழு வயதிற்குள்ளாக விருக்கலாம். மூக்கும் முழியுமாக மாலை நேர சூரியவின் சுவர்ண ஒளியில் சாக்ஷாத் சுவர்ண விக்கிரஹம் போல் விளங்கினள். இவ ளல்லவா அழகு ராணி! என்று மயிர் கூச்சல் எறிந்தான் ராகவன். அவர்கள் அவனைக் கடந்து கொஞ்சதூரம் சென்றதும் "தாரா! அந்த பையன் யார் தெரியுமா? நம்ம மூனுவது அகத்து ராமசுவாமி அய்யங்காரின் பிள்ளையாண்டான். பட்டிணத்தில் யுனெடெட் இந்தியாலைப் இன்ஷ்யூரென்ஸ் பாங்கியில் மாதம் நூறு ரூ. சம்பளத்தில் உத்தியோகம் பார்க்கிருனும்". என்று அந்த கிழவர் சொன்னது ராகவனின் செவியிலும் விழுந்தது. உடனே அந்தப்பெண் திரும்பி ராகவனை வெறிக்க வெறிக்க வினுடிப்பொழுது பார்த்தனள். அந்த கூறிய பார்வையிலும் கூட அந்தப்பெண் அதிக சுந்தரியாகவே தென்பட்டாள்.

* * *

அதற்கு மருநாள் பகல் இரண்டுமணி சுமார் இருக்கலாம் ராகவன் ஏதோ ஓர் தினசரி பத்திரிகையை புறட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தாயார் அவனை சமீபித்து "வாடா அப்பனே! பெண்ணை பார்த்துட்டு வருவோம். அவளை நீ ஒரு தடவை பார்த்து விட்டால் போதும், அப்புறம் பார்த்துக் கொள்!...." என்று பல்லவி ஆரம்பித்தாள்.

ராகவன் வேண்டாவெருப்புடன் "யாரம்மா அது? எந்த பெண்ணையம்மா சொல்லுகிருய்!" என்று ஒரு கேழ்வி போட்டான்.

"அதாண்டா, நேத்து கூட சொன்னேனே. நம்ம நாணுவின் மைத்துனி பெண் என்று? பெண்ணும், தாயாருமா நாணுவின் அகத்திற்கு வந்திருக்கா...."

"நாணுவின் மைத்துனியின் மூத்தாளுடைய பெண் என்று சொல்" என்று திருத்தினர் ராகவனின் தந்தை ஒரு சிடிகை நச்யத்தை மூக்கில் ஏற்றிய வண்ணம்.

"ஓகோ! Plot எல்லாம் முன்னலேயே தயாரித்துக் கொண்டிருக்கிறீர்களோ?" என்று ராகவன் எளனமாக சிரித்தான்.

அவன் தந்தை கடுகடுப்புடன் இல்லாவிட்டால் நித்திய பிரம்மச்சாரியாய் ஒட்டல் சோத்தை தின்னுண்டு காலத்தை தள்ளு, வெகு அழகு! இந்தகாலத்து பையன்களே பெரியவாளுட்டு...."

அதற்குள் கோமளம்மாள் குருக்கிட்டு "நல்ல நாளும் கிழமையுமா குழந்தையை கோபித்துக்கொள்ளாதேயுங்கள் நமக்கிருப்பது உப்புக்கல்போல் ஒரு குழந்தை. அதோ அங்கவஸ்திரத்தை உதரி போட்டுண்டு கிளம்பிட்டான் பாருங்கள்! என் அப்பனேல்லியோ!" என்றவாறு உள்ளே சென்று வெற்றிலை பாக்கு, பழம், மஞ்சள், குங்குமம், ரவிக்கைத்துண்டு முதலியவைகளை தான் தயாராக எடுத்து வைத்திருந்த தாம்பாளத்தை எடுத்துக்கொண்டுவந்தாள். தகப்பனரின் கோபத்திற்கு பயந்தவனுய் ராகவனும் நாற்காலியிலிருந்து எழுந்து வேண்டா வெறுப்புடன் அங்கவஸ்திரத்தை எடுத்து உதறி தோள்மீது




எதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினல் ஏற்பட்ட தாங்கொணத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ.டி.எல். உடனடியானசிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

# கிரைப் சிரப்

கவர்மெண்ட்
இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லேபாடரி, மல்லேஸ்வரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:– மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.

போட்டுக்கொண்டு கிராப்பை வாரி விட்டுக்கொண்டு புறப்படத் தயாராக நின்றிருந்தான். மூன்றுபெயராக புறப்படக்கூடாதென்று கோமளம் அடுத்தகத்து பார்வதி அம்மாமியையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

நாணுவின் அகத்தில் அவர்களுக்கு காப்பி, பலகாரவகையரு உபசாரம் எகதடபுடலாக நடைபெற்றது. சற்றுநேரம் லோகாபிராமமாக வார்த்தையாடியபிறகு நாணு "டீ கனகம்! செம்பகத்தை வந்து எல்லோரையும் சேவிக்கசொல்லடீ. இப்படி பெட்டியை கொண்டுவந்துவை. இரண்டு பாட்டு பாடட்டும்" என்றான். அடுத்த வினாடி நாணுவின் மனைவி கனகம் ஹார்மோனியப் பெட்டியை கொண்டு வந்து எல்லோர் முன்னிலையிலும் வைத்துவிட்டுச் சென்றாள். நாணி கோணிக்கொண்டு பதினைந்து வயதுடைய சிறுமியொருவள் வந்து அனைவரையும் பணித்துவிட்டு, பெட்டியருகில் உட்கார்ந்துகொண்டு ஸ்ருதியுடன் இனிமையாக இரண்டு பாட்டுகள் பாடினாள். பெண் அதிக சுந்தரியென்று சொல்வதற்கில்லை. உடல் பொன்னிறம் என்றுசொல்லலாம். அவளுடைய குருகுருப்பான வண்டுவிழிகளும், வசீகரமான மோகன சிரிப்பும் பார்ப்போர்மனதை கவர்ந்தது. அவளது வசீகர முகச்சாயல் லேசில் மறக்கக்கூடியதாகவில்லை. இன்னும் சற்றுநேரம் பார்க்காமல் போனோமே என்று ஏங்கும்படிக்கான தெவிட்டாத ஓர்வித வசீகர சக்தி அவளிடத்தில் அமைந்திருந்தது. போதிய சிக்ஷை இல்லாவிட்டாலும்கூட அவளது சாரீரம் குயிலினும் இனியதாகவிருந்ததால் சங்கீதம் கேட்பதற்கு இனிமையாகத்தான் இருந்தது. பாடி முடிந்தவுடன் செம்பகம் எழுந்து உள்ளே செல்ல புறப்பட்டாள். அதற்குள்ளாக கோமளம்மாள் எழுந்துவந்து "இந்தாடியம்மா இந்தத் தாம்பாளத்தை எடுத்துக்கோள்" என்று பெண்ணின் நெற்றியில் குங்குமப் பொட்டிட்டு தான் கொணர்ந்த தாம்பாளத்தை அவள் கையில் கொடுத்தாள். வெட்க மேலீட்டால், செந்தாமரைபோல் முகம்சிவக்க செம்பகம் மின்னல் கொடிபோல் நொடிப்பொழுதில் உள்ளேசென்று மறைந்தாள்.

அகத்திற்கு திரும்பிவந்த பிறகு கோமளம்மாள் புத்திரனை "பெண் மனதிற்கு பிடித்திருக்காடா, அப்பனே!" என்று ஒரு கேள்வி போட்டாள்.

ராகவனிடமிருந்து பதில் ஒன்றும் வரக்காணோம். அவன் அகக்கண்முன்புதான் தாராவின் நவநாகரீகத் தோற்றம் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறதே!

அவன் தகப்பனார் "இஷ்டமுண்டானால் "உம்" கொட்டுவது, இல்லாவிட்டால் "ஊகூம்" என்று தலையை ஆட்டுவது. இதொரு பிரமாதக்காரியமாடா?" என்றார்.

"இல்லை, அப்பா! ஊருக்குப்போன பிறகு கடிதம் எழுதுகிறேன்" என்று மழுப்பிவிட்டான் ராகவன். அவன் மனதை கொள்ளை கொண்டவள் தாராவாக விருக்க அவன் எவ்விதம் "ஊம்" கொட்டுவது சாத்தியமாகும்?

"இந்த வருஷமாவது குழந்தைக்கு குருபலம் சேர்ந்திருக்கோ, இல்லையோ" என்று தாயார் முணுமுணுத்தாள்.

அதற்கடுத்தாப்போல் அவன் அவ்விடத்திலிருந்த நான்கு நாட்களும் மாலை நேரத்தில் தவறாமல், ஆற்றங்கரையோரத்தில் போய் ஆஜராய் வீற்றிருந்து, தனது அழகு ராணியை தினந்தோறும் (அவள் உலாவ வரும்பொழுது) தரிசித்து மகிழ்வடைவான்.

* * *

ராகவன் சென்னைக்குத் திரும்பி வந்தவுடன் முதல்காரியமாக தனக்கு ரிடையர்டு டிப்டி கலெக்டர் கிருஷ்ணய்யங்காரின் பெண் தாராவை நிச்சயம் செய்தால் கட்டாயம் தை பிறந்தவுடன் விவாஹம் செய்துகொள்வதாக தகப்பனாருக்கு கடிதமொன்றை எழுதி போட்டுவிட்டுதான் மறுவேலையை கவனித்தான்.

அவன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக எதிர்பார்த்த பதிலும் கிடைத்தது. ஆனல்.......ஆனல் அதில் "தாரா நீ நினைத்தவிதம் கிருஷ்ணய்யங்காரின் புத்திரி அல்ல. அவருக்கு சந்ததியே கிடையாது. அவருடைய மூன்றும் தாரம்தான் தாரா. அவள்தான் உடத்தூர் போல்டுமாஸ்டர் ரங்கசாமி அய்யங்காரின் மகள். அவளைப் போன வருடம் உனக்குக்கூட பார்த்திருந்தேனே. "பெண்ணை வந்து பார்த்துவிட்டுபோ, மகாலக்ஷ்மியைப்போல சகல சுப லக்ஷணங்களும் பொருந்தி விளங்குகிறள்" என்று நான் உனக்கு எழுதியதற்கு "பெண் பட்டிக்காட்டு ரகம்" ஞாட்டு நீ பார்க்கக்கூட வரமாட்டேன் என்று ஒரே பிடிவாதம் பிடித்தாயே அவள் எவ்வளவு ஜோராக விருக்கிறள் என்பதை இப்போது அறிந்தாயா? பிறகு ஏழை ரங்கசாமி அவளை இந்த கிழத்திற்குக் கட்டிக் கொடுத்து விட்டான் பாவம்! நம்மாத்தில் நாம் வரதக்ஷிணை கேட்கிறதில்லையே என்று நம்மை வந்து எல்லோரும் கெஞ்சுகிறர்கள் பாவம்.

செம்பகத்தையும் நீ கலியாணம் செய்துகொள்வதற்கு ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் அவளை காஞ்சிபுரத்தில் தாசில்தாராக விருக்கும் நாணுவின் அத்தானுக்கு கொடுத்து விவாஹத்தை முடித்துவிடுவதென்று நிச்சயித்திருக்கிறர்கள். நாணுவின் அத்தான் மன்னி ஆறு குழந்தைகளை தவிக்க விட்டுவிட்டு மூன்று மாதத்திற்கு முந்தி செத்துப்போய்விட்டாள்.

செம்பகம் ஒரு தாயில்லா குழந்தை. தங்கவிக்ரகம் போலிருக்கிறள். கொள்ளை சமத்து. எனக்கும் அம்மாவிற்கும் இந்த பெண்ணை விட்டுவிட மனதே யில்லை. தினந்தோறும் நாணு இரண்டுவேளையும் வந்து என்னை நச்சரித்துக்கொண்டிருக்கிறன் உடனே தந்தி மூலம் உன் இஷ்டத்தை தெரிவி" என்று அவன் தகப்பனர் எழுதி யிருந்தார்.

ராகவன் கையிலிருந்த கடிதத்தை நழுவவிட்டு "அய்யோ" என்று தலையில் அறைந்துக் கொண்டான். "அநியாயமாய் என் தவறினல் ஒரு பச்சைக் கிளியை பூனைவாயில் கொடுத்தாய்விட்டது. மற்றொன்றையும் பூனைவாயில் கொடுக்கும் பாவத்தை நான் சுமக்கவேண்டுமா! அய்யோ வேண்டாம், வேண்டாம், செம்பகம் என்ன அழகாயில்லையா என்ன? நாட்டுப்புரத்து பெண் ஆனல் என்ன பிரமாதம். அப்பா சொல்வது போல் நாலுநாள் பட்டிணத்தில் வந்து பழகினல் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டுவிடுகிறள். இதற்காகவா........ அய்யோ........அவளை கிழவனிடம் தள்ளிவிடும் பாவத்தை நான்............(உடனே நாணுவின் கிழ அத்தான் அருகில் நின்றவாறு செம்பகம் ராகவனின் அகக்கண்ணின் முன்னல் பரிதாபகரமான காக்ஷி அளித்தாள்) அய்யோ, வேண்டாம், வேண்டாம்; இந்தப் பாவத்தை நான் செய்யேன்" என்று ராகவன் வாய்விட்டு குளறினன்.

* * *

அன்றைக்கு ஒன்றரை மாதத்திற்குச் சரியாக ராகவன் செம்பகத்தின் கலியாணம் செவ்வையாக நடைபெற்றதென்பதை நான் தெரிவிக்கும் முன்னரே வாசகர்கள் ஊகித்திருப்பார்களென்று நம்புகிறேன்.






# பேராசை பெருநஷ்டம்

**திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி**

ஓர் ஊரில் ஒரு ஏழை இருந்தான். அவன் பெயர் கந்தன். ஏழ்மைத்தனத்தால் மிகவும் வருந்தியதால் அவனும் அவன் மனைவியும் கடவுளை வழிபட்டு வாழ்த்தி வறுமையை நீக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது சிவபெருமானும் பார்வதி தேவியும் மனமிரங்கி அவனுக்கு ஒரு லக்ஷ ரூபாய்கள் இரவு 12-மணிக்கு கொடுக்கும்படி அந்த ஊர் கோயிலில் உள்ள விநயகரிடம் சொன்னார்கள். அந்த வரத்தை அவனுக்கும் அசரீரி வாக்காக அறிவித்தார்கள். கந்தனும் அவ்ன் மனைவியும் மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்ததை எதிர் வீட்டிலிருந்த குபேரச் செட்டியாரும் அவர் மனைவியும் அறிந்தார்கள். அவர்களுக்கு அளவுகடந்த பொறாமை ஏற்பட்டது. உடனே அவர் கந்தனிடம் சென்று பேரம் பேசினார். "அப்பா கந்தா! அசரீரி வாக்கை அசட்டு நம்பிக்கையாக நம்ப முடியுமா? அது உண்மையோ மாயமோ எப்படியோ யார் அறிய முடியும்? உனக்கு 10000 ரூபாய்கள் இப்பொழுது தருகிறேன் இன்றையதினம் இரவு உனக்கு பதிலாக உன் சம்மதத்துடன் பிள்ளையார் கோவிலுக்கு இரவு 12-மணிக்கு சென்று ஏதாவது கிடைத்தால் நான் பெற்றுக்கொள்கிறேன். கிடைக்காவிட்டால் லாபம் உனக்கு நஷ்டம் எனக்கு" என்றார். ஆனால் கந்தன் மனைவி கந்தவிடம் ஒப்புக்கொள்ள வேண்டாம் என்று கண் ஜாடைக்காட்டினாள். பிறகு அவர் 70000 ரூபாய்கள் கொடுக்கவே அவள் ஒப்புக்கொண்டாள். அன்று இரவு அவர் பிள்ளையார் கோயிலில் சென்று காத்திருந்தார். நள்ளிரவு அமாவாசை திதி. பிள்ளையார் நகரவேயில்லை. செட்டியார் வயற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டார். 12-மணி நடுநிசியில் பிள்ளையார் தும்பிக்கையை அசைத்துவந்து செட்டியாரைப் பற்றிக்கொண்டு நெருக்கி இழுத்தது. "உடனே நீ பாக்கி 10000 ரூபாய்களை கந்தனுக்கு கொடுக்கிறாயா இல்லாவிட்டால் உன்னை இறுக்கி தண்டிக்க வேணுமா" என்ற சொல் கேட்டது. செட்டியார் பயந்து அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்று 10000 ரூபாய்களை கந்தனிடம் கொடுத்தார். பேராசை பிடித்த பணக்காரன் மூலமாகவே ஏழைக்கு ஈசன் அருள் ஏற்பட்டது

# தாக்ஷாயணி

**எல். ஆர். விஸ்வனாத சர்மா**

குழந்தைகளே நாம் தினந்தோறும் கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்குகிறோம். நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கும், கெட்டகாரியங்களுக்கும் தக்க பலனைக் கொடுப்பவர் அந்த சுவாமிதான். அவர் நம்முடன் நேரில் பேசுவதில்லை. ஆனால் பேசும் தெய்வங்களும் உலகில் உண்டு. அவர்கள் யார் யார் தெரியுமா? தாய், தகப்பனார், குரு, முதியோர் முதலியவர்கள். பெண்களுக்குக் கலியாணமானபின் பேசும் தெய்வம் கணவன்தான். கணவன் சொற்படித்தான் மனைவி கேட்கவேண்டும். அப்படி நடந்தால் நன்மை உண்டு. கணவன் பேச்சை மீறிநடந்தால் கட்டாயம் கெடுதல்தான் சம்பவிக்கும். இதை நிரூபிக்க நான் ஒருகதை விவரமாக எழுதுகிறேன் நீங்கள் கவனமாக படியுங்கள்.

தேவலோகத்திலே பிரும்ம தேவனுக்குச் சகாயமாகப் படைப்புத்தொழில் நடத்திவந்த நவப் பிரஜாபதிகளுக்குள் தலைவர் தக்ஷப்பிரஜாபதி. அவர் ஏராளமாகத் தவம்செய்து பல வரங்களையும், நிறையச் செல்வத்தையும் அடைந்தவர். வெகுநாட்கள் வரையில் குழந்தையே பிறக்கவில்லை. தக்ஷனுக்கு ஒரு பெரிய ஆசை என்னவென்றால் உமாதேவியைப் பெண்ணாகவும், பரமசிவனை மாப்பிள்ளையாகவும் அடையவேண்டும் என்பதே. அதற்காகக் கடுந்தவம் செய்தார். உமாதேவி குழந்தையாகப் பிறந்தாள். தக்ஷன் மிகுந்த ஸந்தோஷங்கொண்டு குழந்தைக்குத் தாக்ஷாயணி என்று பெயர்வைத்துச் செல்வமாக வளர்த்து வந்தார். வயது வந்ததும் பரமசிவனுக்குத் தாக்ஷாயணியைக் கலியாணம் செய்துகொடுத்தார்.

வரவர தக்ஷனுக்குப் பரமசிவனைக் கண்டால் பிடிக்கவில்லை. தக்ஷன் பொன் பொருள் ஆடையாபரண அலங்காராதிகள், மாடமாளிகை, கூடகோபுரங்கள், ஏவலாட்கள் எல்லாம் நிறைந்த பெரிய சீமான். பரமசிவனோ ஆண்டி. சாம்பலை உடல் முழுதும்பூசி உருத்திராட்ச மாலைகளையும், சர்ப்பங்களையும், யானைத் தோல், மான்தோல், புலித்தோல் முதலியவைகளையும் உடம்பில் தரித்துக் கொண்டு வெறியன்போல் விளங்கினால் சீமானுக்குப் பிடிக்குமோ? தக்ஷன் எவ்வளவோ தூரம் சொல்லிப் பார்த்தார்; நல்ல உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு கௌரவமாக இரும்! என்று. பரமசிவன் கேட்கவில்லை. அதனால் தக்ஷன் பரமசிவனை வெறுத்தார். பெண் தாக்ஷாயணியைப் புருஷனுடன் அனுப்ப மறுத்தார். அவள் கேட்காமல் கணவனுடன் கைலாஸம் சென்றாள் இனிமேல் இருவர் முகத்திலும் விழிப்பதில்லையென வைராக்கியம்கொண்டார் தக்ஷப்பிரஜாபதி.

தக்ஷன் தபோபலத்தால் தேவர்கள் எல்லாரையும்விடச் சிறந்தவர் ஆனார். அவர் ஒரு சமயம் ஒரு பெரிய யாகம் செய்தார். யாகம் என்றால் சாமான்ய யாகமல்ல. நம் வீட்டுக் கல்யாணங்களில் செய்கிற ஹோமம் போலவா? அரசர்கள் செய்யும் யாகம் போலவா? அப்படியெல்லாமில்லை. மூன்றுலோகங்களிலும் அதுவரையில் அப்படிப்பட்ட யாகம் நடந்ததேயில்லை. அவ்வளவு பெரிய யாகம். யாகசாலை லட்ச லட்சமாக ஜனங்கள் உட்காரக்கூடியதாக அழகாக அமைக்கப்பட்டிருந்தது. பொன்னும் பொருளும் மூலைகளில் போர் போலக் குவிந்திருந்தன. நெய்க்குடங்கள், பால் குடங்கள், தயிர் குடங்கள், பழவகைகள், காய்கறிகள் முதலிய சாமக்கிரியைகளெல்லாம் கணக்கிட்டுச் சொல்லமுடியாதபடி அங்கே நிரப்பப்பட்டிருந்தன. தேவர்களெல்லாம் ஓடியோடி வேலைகளைக் கவனித்தனர். இந்திரன், யமன், வருணன் குபேரன் முதலிய திக்பாலகர்கள், பிரும்மா, விஷ்ணு முதலியவர்கள் ரிஷிகள் முனிவர்கள் எல்லோருக்கும் தக்ஷன் அழைப்பு அனுப்பியிருந்தபடியால் எல்லோரும் வந்திருந்தனர்.

யாகங்களில் மந்திர உச்சாடனத்துடன் எல்லாதேவதைகளுக்கும் ஹவிர்ப்பாகம் கொடுப்பது வழக்கம். மனிதர் செய்யும் யாகத்தில் தேவர்கள் மறைந்து இருந்து ஹவிர்ப்பாகத்தைப் பெறுவர். தேவர்கள் செய்யும் யாகங்களிலோ நேரிலேயே வந்து வாங்கிக்கொள்வர். ஹவிர்ப்பாகம் பெறும் தேவதைளுள் ரொம்ப ரொம்ப முக்கியமானவர்கள் மும்மூர்த்திகளான பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் மூவரும்தான். எல்லோரினும் முக்கியம் ருத்திரன்: தக்ஷனோ ருத்திரன் என்கிற பரமசிவனை யாகத்திற்கு அழைக்கவேயில்லை.


பரமசிவனும் வந்திருப்பார், அல்லது கொஞ்ச நாழிகையில் 'வருவார்' என்று எதிர்பார்த்த மற்ற தேவர்களெல்லாம் ஏமாற்றமடைந்தார்கள். நாழிகை ஆக ஆக எல்லோரும் மனம் கலங்கினர். முடிவில் பரமசிவன் இந்த யாகத்துக்கு வரப்போவதில்லை என்பதை நிச்சயமாக அறிந்ததும் எல்லோரும் மிகுந்த பீதியுடன் அவர் வராத யாகத்தை நாமெல்லோரும் இருந்து நடத்திவைப்பது மகா குற்றமாகும். நாமும் போய்விடுவோம் என்று தீர்மானித்துப் புறப்படத் தயாராகும்போது அதை யறிந்த தக்ஷன் தனது செல்வாக்கையும், சக்தியையும் பிரயோகித்து அவர்கள் போவதைத் தடுத்துவிட்டார். பாவம் தேவர்களெல்லாம் இன்னது செய்வதென்று புரியாமல் திகைத்தனர். யாகம் ஆரம்பமாயிற்று.

யாகத்தின் வைபவத்தைக்காண மூவுலகங்களிலுள்ளவர்களும் வந்தார்கள். சில தேவர்கள் வரும் வழியில் கைலாஸமலை இருந்தது. அங்கே தாக்ஷாயணி மலையடிவாரத்தில் தனது குழந்தைகளான கணபதியும், கந்தனும் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். தேவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைக்கண்டு "என்ன விசேஷம்? எங்கே போகிறீர்கள்?" என்று வினவினாள். "தக்ஷப்ரஜாபதி ஒரு பெரிய யாகம் செய்கிறார். நாங்களெல்லாம் அங்கேதான் போகிறோம்" என்று தேவர்கள் கூறினார்கள். உடனே தாக்ஷாயணிக்கு அளவுகடந்த ஆசை ஏற்பட்டுவிட்டது. தன் தகப்பன் ஒரு பெரிய யாகம் செய்வதைப்பார்க்க எந்தப்பெண்ணுக்குத்தான் ஆசையாக இராது? பரமசிவனிடம்போய் விஷயத்தைக்கூறி அவரையும் அழைத்தாள்.

பரமசிவன் பரிகாசமாக நகைத்து; அடி அசட்டுப் பெண்ணே! அழையாத வீட்டில் யாரேனும் நுழைவார்களா? உன் தகப்பனே எல்லாருக்கும் அழைப்பு அனுப்பி நமக்குமட்டும் அனுப்பாமல் இருக்கிறான். நாம் வரவேண்டாமென்பதே அவன் எண்ணமாக யிருக்க நீ யிப்படி ஆசைப்படுவது தகுமா? என்று கூறினர். தாக்ஷாயணி கேட்கவில்லை. வெகுநேரம் வாதாடினாள். பரமசிவன் அனுமதிக்கவில்லை. "நீங்கள் வராவிட்டால் போங்கள் நான் போய்த்தான் தீருவேன்" என்று பிடிவாதம் செய்தாள் தாக்ஷாயணி. கோபத்துடன் "சரி நீ போ உன் பெற்றோர் உன்னை அன்புடன் வரவேற்ருல் நீ திரும்பி இவ்விடம் வா, அங்கே அவமானப்பட்டால் இங்கே வராதே" என்று கூறினர் பரமசிவன். தாக்ஷாயணி புறப்பட்டாள். குழந்தைகளைக்கூட அழைத்துக்கொண்டு போகக் கூடாதென்று சிவன் சொல்லிவிட்டபடியால் தனியாகவே வழிநடந்து தக்ஷனின் இருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

வரும் வழியிலெல்லாம் பதியின் சொல்லைத் தட்டி வருகிறோமே என்று தாக்ஷாயணியின் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனல் யாகசாலையை அண்டினதும் அங்கே இருக்கும் ஆரவாரத்தால் அவள் மனதிலிருந்த சஞ்சலம் நீங்கி உத்ஸாகம் பிறந்தது. யாகசாலைக்குள் நுழைந்த தாக்ஷாயணி எல்லோரையும் கடந்து பெற்றோர் இருக்குமிடத்தை நாடிச் சென்றாள். இவளைக் கண்டதும் எல்லோரும் கசமுசவென்று பேசிக்கொண்டார்கள். தக்ஷனும் அவர் மனைவியும் தாக்ஷாயணியைப் பார்த்ததும் முகத்தைச் சுண்டிக்கொண்டார்கள்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY







தன் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிறோம். **ஆனால் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனால் அவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால், அவருடையகுடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது?

**"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ்"** தான்

**அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால்—**

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,**

7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

ஸப் ஆபீஸ் :
171, புதுத்தெரு, மதுரை.

மதருஸ் பிராஞ்சு :
58, சோபதிநாராயணஸ்வாமி செட்டி ரோடு, திருமலைநாயகர், மதராஸ்.

ஸப் ஆபீஸ் :
5, செம்படோட ரோடு, பெங்களூர்.

“எதடா, நாம் அழைக்காவிட்டாலும் தானாகவாவது நம் குழந்தை வந்தாளே என்று பிரியமாக நடந்துகொள்ளவில்லை. வா என்று அழைக்கக்கூடவில்லை. அதனால் தாக்ஷாயணி மனம் புழுங்கினாள். அதைக்கண்ட அங்குள்ளோர் கேலியாக நகைத்தனர். தாக்ஷாயணியின் கண்கள் கோபத்தால் சிவந்தன. மனம் துக்கத்தில் பொங்கிற்று “ஆகா! பர்த்தாவின் பேச்சைத் தட்டிவிட்டு வந்ததற்கு பலன் இதுதான் போலும்! நம்மை வா என்று கூடப் பெற்றோர் அழைக்கவில்லை. மற்றோரும் பேசவில்லை. எல்லோருடைய பரிகாசத்திற்கும் ஆளானோமே இந்த அவமானத்தோடு எப்படி நாம் மறுபடி நமது கணவனிடம் போவது; என்றெல்லாம் யோசித்தாள்.” சீ இப்படிபட்ட உடலை வைத்துக்கொண்டு நாலுபேர் கண்முன் நடமாடுவதைவிடப் பிராணனை விடுவதேமேல் என்றெண்ணிய தாக்ஷாயணி என்ன செய்தாள் தெரியுமா? அங்கே அகண்டாகாரமாய் எரிந்து கொண்டிருந்த ஹோம குண்டத்தில் விழ்ந்துவிட்டாள்.

அவ்வளவுதான் இந்த ஸமாச்சாரம் ஞானதிருஷ்டியால் பரமேசுவரனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே வீரபத்திரரை ஏவி தக்ஷயாகத்தை அழித்துவர கட்டளையிட்டார். அவர் கடும் கோபத்துடன் தக்ஷனின் யாகசாலையில் புகுந்து ஹதாஹதம் செய்தார். யாகசாலை கோலாஹலமாயிற்று. இவ்வளவுக்கும் காரணம் கணவன் சொல்லைத் தட்டி தாக்ஷாயணி வந்ததால்தானே? அவள் அவர் பேச்சை கேட்டு அங்கேயே தங்கி யிருந்தால் யாகம் நிர்விக்கினமாக நடந்திருக்கும்; குழந்தைகளே! உலகத்தில் பெண்கள் எப்போதும் கணவன் சொல்லைக் கேட்க வேண்டுமென்பது விளங்குகிறதல்லவா;

—o—

உண்மை நூல்கள்! சிறந்த நூல்கள்!!

## அவசியம் படிக்க வேண்டுவன

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தேசபக்தன் கந்தன் (புதிய பதிப்பு) —கா. சி. வேங்கடரமணி | 2 | 0 | 0 |
| 2. | ஜடாதரன் (சிறுகதைகள்) —ரெ. சி. வேங்கடரமணி | 1 | 3 | 0 |
| 3. | தராசு—ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் | 1 | 0 | 0 |
| 4. | கதைக்கோவை—முதல் தொகுதி | 3 | 8 | 0 |
| 5. | கதைக்கோவை—இரண்டாம் தொகுதி | 4 | 0 | 0 |
| 6. | ரவீந்தரநாத் டாகுர்—சுத்தானந்த பாரதி | 1 | 0 | 0 |
| 7. | பிரயாண நினைவுகள்—எ. கே. செட்டியார் | 1 | 0 | 0 |

சுவேதாரண்ய ஆசிரமம்
43, மகாதானத்தெரு, மாயவரம்.

Edited & Published by K. S. Venkataramani at No 43 Mahadana Street Mayavaram, printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press, 29, Mahadana Street, Mayavaram.